REGD. M. 4642,

திராவிடநாடு

மலர் 6 | 27—7—47 | இதழ் 9

சிந்தனைக்கு!

[புதுவைச்சிவம்.]

—✻—

தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் வாழுகின்றார்
தன்மதிப்புச் சிறிதேனும் இல்லாராகி!
தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் வாழுகின்றார்
தந்நாட்டில் பிறராணைக் கேவல் செய்தே!
தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் வாழுகின்றார் தம்
மொழியையிகழ்ந்துபகைமொழியைப்போற்றி!
தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் வாழுகின்றார்
தந்நிலையை ஒருசிறிதும் உணராராகி!

உலகத்தில் முதன்முதலாய் மக்கள் தோற்றம்
உண்டான இடத்தவர்ன் வழியில் வந்தோர்—
பலபலவாம் நாட்டாரின் புழ்ச்சி மாலை
பாங்குடனே ஏற்றவரின் பின்னே வந்தோர்,
நலிரோகம் வாய்ந்திட்ட நிலையைப் போல
நலம்பலவும் இழந்தறிவை யிழந்து, நாளும்
சோலமுடியா வறுமையினில் மூழ்கிமூழ்கித்
துடிக்கின்றார் மிகுதுயரில் நலிவு கொண்டே!

அடிமையினில் வாழ்ந்தோர் அவ்அடிமைபோக்கி
அறிவுடனே வாழ்கின்றார் இந்நாள் எங்கும்!
படிதனிலே தமிழர்நிலை மட்டும் இன்னும்
பரிதாப நிலைக்கிடனாய் இருக்கக் கண்டோம்!
விடுபட்டோம் என்கிறார், இரு பால் செய்த
விலங்குக்குப்பதிலாய்ப்பொன்விலங்குகண்டு!
கேடுநிலையை விடுதலையென்றுரைத்துவிட்டால்
கேடெல்லாம் தீர்ந்திடுமோ? நல னுண்டாமோ?

அறிவுக்கு முள்வேலி அமைக்கின்றார்கள்
அதிகாரம் பெற்றுள்ள ஆட்சியாளர்!
குறைவாழ்வு போக்கிடவோ எண்ண வில்லை;
கொடுமைக்கு வித்தூன்றும் செயலே மேலும்!
செறிந்துள்ள இவ்வறியாச் செயல்கள் யாவும்
தீராமுன் தீர்ந்திடுமோ இழிவும், துன்பும்?
நெறிவாய்ந்த சமதர்ம இன்பவாழ்வும்
சேர்ந்திடுமோ? சிந்திப்பீர் அறிவு கொண்டே!

16-ம் பக்கத் தொடர்ச்சி

ளாகிவிட முடியுமா? அதற்கான ஏற்பாடு வேண்டாமா? வேண்டிய சாதனங்களுக்கு இங்கு ஏதாவது குறைவுண்டா? மடைமை அன்றோ சகல இன்னல்களுக்கும் மூலம். அறியாமை அகற்றப்பட வேண்டியது அனைத்துக்கும் அடிப்படை அல்லவா? இது செப்பனிடப்படாவிட்டால் மற்ற முன்னேற்றம் எதுவும் எளிதில் ஏற்படாதே!

நாட்டு மக்களுக்கு உடனடியாகச் செய்யவேண்டிய இவ்வளவு அரும் பெரும் பணிகள் இருந்தும், அவருக்கு வேறொன்றிலே நாட்டஞ் செல்லுகிறது. காப்பாற்றப்புறப்பட்டு விட்டார்-மக்களை அல்ல-மாக்களை!

அவருக்குக் கண்கள் நீரோடையாகிவிட்டன. நாவறண்டு விட்டது. உதடு உலர்ந்து போயிற்று. போருக்குக் கிளம்பி விட்டார். கிராமத்திற்கு கிராமம் நகரத்திற்கு நகரம் புறப்பட்டுச் செல்வாராம். உயிரைக் கொடுத்தேனும் கொண்ட கருத்தை முடிப்பாராம். தாம் களத்திலே பலியானால் தப்பி போர் முனைக்கு புகுவானும். பின்னர் ஆசை மகனும். அதன் பின்னர் அருமை மனைவியைக் களத்தில் காணலாமாம்.

அவர் கண்டுள்ள பாதுகாப்புச் சங்கத்தில் சீமான்களுக்கும் ஏழைகளுக்கும், மன்னர்களுக்கும் பஞ்சைகளுக்கும், சிறியவர் பெரியவர் எனும் பாகுபாடு இல்லாமல் இடமுண்டாம். பெரும் பொருளை ஒதுக்கி வைத்திருக்கிறாராம்.

சட்டஞ் செய்து அவருக்குண்டான சஞ்சலத்தைப் போக்க வேண்டுமாம். அரசியல் ஆக்கக் குழுவிலும், அவர் உள்ளத்தை வாட்டி வதைக்கும் பிரச்னை இடம்பெற வேண்டுமாம். அதற்காகச் சுதேசமன்னர்கள் முயற்சி எடுக்கவேண்டுமாம். முயற்சி தோற்றால், அவர்கள் 'வெளியேறும்' நாடகம் நடத்த வேண்டுமாம்!

பாகிஸ்தானிலும், ஜின்னா பாதுகாப்புச் செய்ய வேண்டுமாம். அதனால் ஹிந்துக்களின் வாழ்த்து அவருக்குக் கிடைக்குமாம். தமது கோரிக்கைக்கு வரலாறு கூட உண்டாம். அக்பர், உமாயூன், பாபர் முதலிய முஸ்லிம் மன்னர்கள் கூடச் சட்டத்தின் மூலம் பாதுகாத்தார்களாம். குற்றவாளிகளைத் தூக்கு மரத்தில் தொங்கவிட்டு வேடிக்கையும் பார்த்தார்களாம்!

இவ்வளவிற்கும் ஒரே ஒரு நிபந்தனைதான் அவர் விதித்திருக்கிறார். அதாவது சட்டப்படி தடுக்கப் படவேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டமியற்றவில்லையானால் ஹிந்துக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரே முகமாகக் கண்டனஞ் செய்யச் சொல்வாராம்!

அந்த மகாநுபாவரின் போர் முழக்கத்தால் இந்த உப கண்டத்தின் மக்களுக்கு என்னென்ன ஆபத்து வரவிருக்கிறதோ? நிர்வாகம் ஸ்தம்பித்து விடுமோ? கைபிழந்தவர், கால்முறிந்தவர் தொகை கணக்கிலடங்காமல் போகுமோ? அணுகுண்டு வீசப்படுமோ? ஆகாயப் படையெடுப்பால் அவதி பல நேருமோ? என்றெல்லாம் அஞ்சினோம். இவைகளுக்கெல்லாம் இடமில்லை; பீதிகொள்ளத் தேவை இல்லை என அவரே கூறிவிட்டார்!

“சாமி விவேகாநந்தர் பம்பாயில் வந்து தங்கி இருக்கிறார். அவர் தோற்றத்தையும் உடையையும் கண்டவர், அவரை ஓர் சந்நியாசி எனக் கொள்ள மாட்டார்கள். இந்நிலையில் பசு வதைப் பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த சில இளைஞர்கள், உண்டிப் பெட்டியைச் சாமியாரிடம் குலுக்கிப் பல்லிளித்து நின்றனர். “உங்கள் பெற்றோர் யாவர்?” எனச் சாமியார் கேட்டார். தத் தம் வரலாற்றைக் கூறினர். “முஸ்லிம் மண்டையை ஹிந்துவும், ஹிந்து மண்டையை முஸ்லிமும் உடைத்துக் கொள்ளுகிறார்கள்; அவர்களிடை வேற்றுமையைப் போக்கி அன்பை வளர்க்க உங்கள் தொண்டு பயன்படட்டும். அதை விடுத்துப் பசுவைக் காப்பாற்றப் புறப்பட்டு விட்டீர்களே? நீங்கள் பசுவுக்குப் பிறக்கவில்லையே! நீங்கள் பிறந்த மக்கள் இனத்திற்குசேவைசெய்யுங்கள்” என எடுத்துக்காட்டி அனுப்பிவிட்டார். இதனைப் போருக்குப் புறப்பட்டுள்ள சேத் ராமகிருஷ்ண தால்மியாவிற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

பசுவைக் காப்பாற்றும் பெரும் பணியில்தான் இனிப் பொருளையும் நேரத்தையும் செலவிடப் போகிறாராம். ஒரு ஆண்டிற்குள் அதற்கான சட்டஞ் செய்யப் படவில்லையானால், உண்ணா நோன்பு நோற்று உயிர்விடவுந்துணிவாராம். சில நாளைக்கு முன்னால் அவருக்கு ஒரு புது நோய் உண்டாயிற்று. இப்பொழுது அதே நோய் இரண்டாம் கட்டத்தை அடைந்திருக்கிறது.

அவருக்கு இந்தியாவின் பலபகுதிகளிலும் பலவிதமான தொழிற்சாலைகள் உண்டு. எதிர்காலத்தில் தொழில் அரசர் பிர்லாவுடன் அவரால் போட்டியிடுவது சிரமமான காரியம். எனவே மேலும் பல பத்திரிகைகளைப் புதிதாகத் துவக்கிப் பொது மக்கள் சேவையில் ஈடுபடப் போவதாகக் கூறினார். பாகிஸ்தானிலும் பத்திரிகைகள் நடத்தப் போவதாகப் பறை சாற்றினார். இதற்குள் பசுவைக் காப்பாற்றும் பணிக்கு பலிபீடம் ஏறப்போவதாக அறிவிக்கிறார்!

அங்கு வடநாட்டில் ஹிந்து முஸ்லிம்களிடையே உள்ள பிணக்கைத் தீர்க்கத் தமது பத்திரிகைகளின் மூலம் பணியாற்றலாம். அதனை அவர் செய்வார் என எதிர்பார்க்க முடியாது. பசுவைக் காப்பாற்ற அவர் புறப்பட்டிருப்பதே இரு சாராருக்கும் இடையே உள்ள பிளவைப் பெரிதாக்கத்தான். பன்றி இறைச்சியையைப் புசிப்பதை வேண்டுமானாலும் ஹிந்துஸ்தானில் சட்ட மூலம் தடுத்து விடுகிறாராம். தாம், ஹிந்துஸ்தானின் பிரதமர் அல்லது சர்வாதிகாரி என்ற எண்ணம் போலும்!

தால்மியாவின் பரம்பரையினர் பசுவைத் தெய்வமாகப் போற்றுகின்றனர். ஆதலால் அது வதைக்கப்படுவதைத்தடுக்க வேண்டுகிறார். ஆனால் இஸ்லாமியர் பன்றியைக் கண்டாலே வெறுப்பவர்கள். பன்றி கொல்லப்படுவதைக்கண்டோ, அதன் இறைச்சியைச் சிலர் புசிப்பது கண்டோ அவர்கள் மனம் புழுங்கக் காரணமில்லை. உண்மை இவ்வாறு இருக்க, துளியும் பொருத்தமற்ற விஷயத்தைத்தொடுத்துப் பேசுவது பசுவைக் காக்கத் தால்மியா முனைவதில் மறைந்துள்ள உண்மையைத்தான் வெளிப்படுத்துகிறது. தசாவதாரப் பெருமையில்தான் தால்மியாவின் கலாசாரம் தொங்கிக்கொண்டிருக்கிறது. அவர் தம் நன்மைக்காக வேண்டுமானால், பன்றி காப்பாற்றப் படவேண்டும் என முயல்வதிலும் பொருள் உண்டு!

பசுவைக் காப்பாற்றக் குடும்பத்துடன் பரித்தியாகம் செய்யத் தயாராக இருக்கும் இந்தத்தயாளமூர்த்தி ஒன்று செய்வாரா? நமது திராவிட

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

திராவிடநாடு

விலை 2 அணா ஆண்டுசந்தா ரூ 7

சிலந்தியும் சிவனும்

(நக்கீரன்)

பெரியபுராணத்தில் பேசப்படும் கதைகள் எல்லாம் கற்பனையேயன்றி, அவற்றில் கடுகளவும் உண்மைகாண முடியாதென்றும், அவை அனைத்தும் சைவசமயத்திற்கு உயிர்ப் பிச்சை அளிப்பதற்காகக் கட்டிப் புனைந்து கூறப்பட்டவை என்றும் பலமுறை—பல மேற்கோள்களுடன்—எவராலும் மறுக்கமுடியாத ஆதாரங்களை எடுத்துக்காட்டி விளக்கினோம். என்றாலும், பெரியபுராணம் போன்ற பித்தலாட்ட ஏடுகளைத்தங்கள் பிழைப்புக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கும் சிலசைவப்புலவர்களுக்கு மட்டும் உண்மையை உணர்ந்து, உயரிய பண்புகளை மேற்கொண்டு, உலகியலோடு ஒன்றிக், காலத்திற்கேற்பக் கண்ணியமாக வாழவேண்டுமென்ற விருப்பமோ, அன்றி மக்களின் மனப்போக்கை அறிந்து அதற்கேற்பத் தங்களுடைய அறிவில் படிந்துள்ள மாசைத் துடைத்து, பழைமையில் நெளியும் மயக்கத்தை மாய்த்து, மன்பதை எதிர்பார்க்கும் சீரியவாழ்வுக்கு நேரானவழி வகுக்க வேண்டுமென்ற ஆர்வமோ ஆண்மையோ உண்டாவதில்லை. இதற்குக் காரணம் என்ன? "எவ்வளவு காலமாகப் புராணங்களை மெய்யென நம்பி, அவற்றை மக்கட்குப் போதித்து வந்த நாமே, இப்போது அவற்றிலுள்ள ஊழல்களை எடுத்துக் காட்டி அவையாவும் பொய்; அவற்றை நீங்கள் நம்புதல் கூடாது" என்று எப்படிக் கூறுவது என்ற கூச்சம் கலந்த நாணமேயாகும். இந்தக் கூச்சம்,

> "விழித்தும், குருடர்க்கு ஒளி பகையாய்க் கூசிக்கோல் போடார்"

என்பதோடு ஒக்கும். அதாவது:—நோய்காரணமாகக் கண்தெரியாத குருடன் தன்கையில் ஒரு கோல் தாங்கி நடக்கிறான். பின்னர், நோய் நீங்குவதற்குரிய மருந்துண்டு கண் தெரியப் பெறுகிறான். என்றாலும், கண்தெரியாத காலத்தில் கையில் பிடித்திருந்த கோலை மட்டும் அவன் விடுவதில்லை; காரணம், அவனுக்கு ஒளியே பகையாகி விடுகிறதாம். இது போலவேதான், நம்முடைய சைவப் புலவர்களின் நிலையும். அறியாமை காரணமாக, உண்மை எதுவென அறிந்துகொள்ள முடியாதிருந்த காலத்தில், புராணங்களை உண்மையென நம்பி, அவற்றையே தங்களுடைய அறிவைத் துலக்கும் கருவிகளாகக் கொள்கிறார்கள். பின்னர், அறியாமை நீங்குவதற்குரிய தெளிவைத் தாங்களாகப் பெற முடியாத நிலையில், நோய் கண்டு மருந்தளிப்பவன்போலப், பிறர், அதாவது, பொய் கண்டகன்ற மெய்யறிவாளர்கள், இவர்தம் அறியாமையைப் போக்க வேண்டுமென்ற அன்பால், "பொய் இது—மெய்இது எனப் பிரித்துப் பிரித்துக் காட்டிப் பொய்யைவிட்டு மெய்யைமேற்கொள்ளுங்கள்" என்று கூறி அவர்களுக்குத் தெளிவை உண்டாக்குகிறார்கள். அல்லது ஒருசிலர் தாமாகவே காலப்போக்கையொட்டி அந்தத் தெளிவைப் பெறுகிறார்கள், என்றாலும் அறியாமை என்னும் இருள் சூழ்வதற்குக் காரணமாக இருந்த புராணங்களை மட்டும் அவர்கள் கைவிடுவதில்லை. காரணம், தெளிந்த அறிவே அவர்களுக்குத் தீராப்பகையாகி விடுகின்றது போலும்! ஏன் அவர்களுக்கு இந்த நிலை ஏற்படுகிறது? பழக்க மிகுதியோ, அன்றிப், பார் சிரிக்குமோ என்ற அச்சமோ, நாம் அறியோம். அறிந்த அல்லது அறிவிக்கப்பட்ட உண்மையை ஒப்புக்கொள்ள அச்சப்படும் இப்புலவர் பெருமக்களின்நிலை கண்டு நாம் உண்மையிலேயே இரக்கப்படுகின்றோம்.

குப்பையைக் கிளறி இரைதேடித் தின்று பழக்கப்பட்ட கோழி, குவியலாக உள்ள நெற்போரையும் கிளறியே தின்பது போலப், புராணக் குப்பைகளில் உண்மைகாண உழன்று கொண்டு திரிந்த புலவர்களுக்கு, உண்மை இருக்கும் இடத்தைக் காட்டியபின்னரும், அதைவிட்டுப், பழையபடியும் புராணக் குப்பைகளையே கிளறிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இவர்களுக்கு எடுத்துக் காட்டாக எதனை — யாரைக் காண்பிப்பது? குப்பையைக் கிளறும் கோழிக்காவது யாதாயினும் பூச்சிபுழுவேனும் அதற்குணவாகக் கிடைக்கும். ஆனால் புராணங்களைக் கிளறும் புலவர்களுக்கோ உண்மையென்பது தினைத்துணையும் கிட்டாதே! சிறிதளவு அவர்களிடம் காணப்படும் உண்மையையும் மறைக்கும் கருவிகளன்றோ புராணங்கள்! உண்மையைஉலகுக்கு அப்பால் கொண்டுபோய் விடவேண்டுமென்றால், புராணங்களைப் படித்தால் போதுமே! பொய்யும்—புளுகும்—புனைசுருட்டும் சேர்ந்த கூட்டுச் சரக்கே புராணங்கள் என்பதைச் சில சைவப்புலவர்கள் சந்தர்ப்பத்தையொட்டிச் சில சமயங்களில் ஒப்புக்கொள்ளவும்பின்வாங்குவதில்லை. இவர்களே இன்னொரு சமயத்தில், புராணங்களைப் பொய்யென்று உரைப்போர் தம் மெய்யின் நிழலைக்கூட மிதிக்கமாட்டோம் என்பர். இத்தகையவர்களின் இந்த இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையை மாற்றுவதற்காகவே இதுபோன்ற பல ஆராய்ச்சிகளை அடிக்கடி எழுதுகின்றோம்.

கட்டுத்தறியிலே ஒரு கன்றுக்குட்டி கட்டப்பட்டிருக்கிறது; அது வெளியே போவதற்காகக் கட்டு அவிழ்த்து விடப்படுகிறது; என்றாலும், அந்தக் கன்றுக்குட்டி அந்த இடத்தை விட்டு நகர்வதில்லை; காரணம்; தான் இன்னும் கட்டுப்பட்டு

இருப்பதாகவே கன்றுக்குட்டி நினைக்கிறது; அந்த நிலையில் அதன் கட்டை அவிழ்த்துவிட்டவன், தன்னுடைய கரத்தால் அதனை தட்டியோட்டி வெளியிற் போகும்படி செய்கிறான். அதுபோலவே, புராணப்பிடியில் சிக்குண்டு கிடக்கும் புலவர்களையும் நாம் விடுவிக்க முயல்கிறோம். புராணமே புகலிடமெனக் கருதி அதனுள் கட்டுண்டு கிடக்கின்றார்கள் சில புலவர் பெருமக்கள். அவர்களின் கட்டுப், புராணத்தின் புன்மையை உணர்ந்தோரால் அவிழ்த்து விடப்படுகிறது. என்றாலும் அவர்கள் அந்தஇடத்தை விட்டுஅகல்வதில்லை. காரணம்; கட்டு அவிழ்த்துவிடப்பட்ட கன்றுக்குட்டியின் நிலையிலேயே சிலர் உள்ளனர் என்ற போதிலும், அவர்களிற் பெரும்பாலாருக்கு, "இவன் யார் நமது கட்டை அவிழ்ப்பது! நாம்யார் இவன்கட்டு அவிழ்த்து விட்டுவிட்டான், இனிப் போகலாம் என்று எண்ணி அந்தஇடத்தைவிட்டு விலகுவது?" என்ற நினைப்பே இருக்கக் காண்கிறோம்.

எனவேதான், நெல்லுக்கிறைப்பது புல்லுக்கும் ஆவதுபோல், திருந்தக்கூடியவர்களுக்கும், திருந்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்கும் எழுதப்படும் விளக்கங்கள், நெல்லும் புல்லும், இறைக்கப்படும் நீரால் பயன் அடைவதுபோல், நல்லார்க்கும் பொல்லார்க்கும் பயன்படட்டும் என்ற நல்லெண்ணமே இவ்வாறு நடுநின்று எழுதும்படி செய்கிறது. இதுமட்டுமல்ல நாம் இப்படி எழுதுவதற்குக் காரணம்.

நெற்பயிர் உள்ளஇடம் நீர்இறைக்கும் இடத்தை விட்டுத் தொலைவில் இருக்கிறது. அந்த இடத்துக்கு நீர் போய்ச் சேரவேண்டுமென்பதற்காக வயலுக்கும் நீர்நிலைக்கும் இடையே ஒருவாய்க்கால் வெட்டி அதன் வழியாக நீரைப் பாய்ச்சுகிறோம். ஆனால் அந்த நீர் நாம் நினைக்கிறபடி முதலில் நெற்பயிருக்குப் பயன்படுவதில்லை. வாய்க்கால் ஓரங்களில் உள்ள புல்லுக்கே அந்தநீர் முதலில் பயன்படுகிறது: இது போலவேதான், நல்லவர்களுக்காகச் செய்யப்படும் காரியங்களும் முதலில பொல்லாதவர்களுக்கே பயன்படட்டும் என்று கருதுகிறோம். பொல்லாதவர்கள் முதலில் திருந்திவிட்டால், பின்னர் நல்லவர்களாக வேண்டுமென்ற எண்ணத்தோடு உள்ளவர்களைத் திருத்துவது எளிதாக முடியக் கூடியக் காரியம் என்றும் கருதுகிறோம். அதனாலேயே, புராணங்களில் பற்றுடையோரை முன்னிறுத்தி எழுதுகின்றோம். அவர்களை அறைகூவி அழைத்து 'இதற்கு என்னவிடை கூறப்போகிறீர்கள்' என்று கேட்கிறோம். யானையும் சிலந்திப்பூச்சியும் சிவனை வழிபட்டு அருள்பெற்றன என்று பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே! அது உண்மையா? மக்களாய்ப் பிறந்தால்கூட மகேசுவரனுடைய அருளைப் பெறுவது எளிதில்முடியக்கூடிய காரியமல்லவென்று புராணங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறதே! அப்படியிருக்க யானையும் சிலந்தியும் சிவனருளைப் பெற்றதாகச் சொல்லப்படுவதை எப்படி நம்புவதென்று சைவப் புலவர்களைக் கேட்கிறோம். இதோ அந்த வரலாறு.

இப்போது திருவானைக் கோயில் என்றும் திருவானைக்காவல் என்றும், திருவானைக்கா என்றும் அழைக்கப்படும் ஊர், முன்பொருகாலத்தில் காடாக இருந்தது. அந்தக்காட்டில் ஒரு வெண்ணாவல் மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அஃதொரு வெள்ளானைக்குப் புலப்பட்டது. அந்த யானைக்குச் சிவலிங்கவழிபாடு செய்யவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. உண்டாகவே, தன்னுடைய துதிக்கையால்நீரைமுகந்து கொண்டு வந்து சிவலிங்கத்தைக் குளிப்பாட்டும். மலரைப் பறித்துக் கொண்டுவந்து அதற்குச் சாத்தும். இதனால் அந்த இடத்துக்குச் திருவானைக்கா என்ற பெயர் உண்டாயிற்று.

இஃதிவ்வாறாக, அந்த வனத்திலிருந்த ஒரு சிலந்திப்பூச்சிக்கும் அந்தச் சிவலிங்கம் தென்பட்டது. சிவலிங்கத்தின்மீது சருகு உதிர்வதை அச்சிலந்திகண்டது. அதைத்தடுக்கும் பொருட்டுச் சிலந்தி தன்வாய் நூலால் சிவலிங்கத்துக்கு மேற்கட்டி அதாவது பந்தல் அமைத்தது. வழிபாட்டுக்கு வரும்யானை அந்தமேற்கட்டியைக் கண்டது. அது குற்றம் எனக் கருதி அந்த மேற்கட்டியை அழித்தது. சிலந்தி அதனைப் பார்த்து, யானையினுடைய துதிக்கை சுழன்றகால் அந்த மேற்கட்டி கலைந்ததென்று நினைத்து, மறுபடியும் தன்னுடைய வாய்நூலால் ஒரு மேற்கட்டி அமைத்தது. அதனையும் யானை அழித்தது. இதனைக் கண்ட சிலந்திக்குச் சினம் மூண்டு, யானையின் துதிக்கையுள் நுழைந்து அதனைக் கடித்தது. யானை கீழே விழுந்து துதிக்கையை மோதி மோதி இறந்தது. துதிக்கையை மோதியதால் அதற்குள்ளிருந்த சிலந்தியும் மாண்டது. இதனைக் கண்ட சிவன், யானைக்குச் சிவகதி வழங்கினார். சோழ குலத்திலே பிறக்குமாறு சிலந்திக்கு அருள் செய்தார்.

சிலந்தியின் உயிர் சுபதேவர் என்னும் சோழ மன்னன் ஒருவனுடைய மனைவியின் கருவில் வந்து சேர்ந்தது. அந்த அம்மையார் குழந்தையைப் பெற்றெடுக்கும் நேரத்தில், "பிள்ளை இப்பொழுது பிறத்தல் கூடாது; இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமாயின், அது மூன்று லோகத்தையும் ஆள்வதாகும்" என்று காலக் கணிதர் (சோதிடர்) சொன்னார். "அப்படியானால் என்னைத் தலைகீழாகக் கட்டுங்கள்" என்று அந்த அம்மையார் கட்டளையிட்டார். அவ்வாறே செய்யப்பட்டது. தலைகீழாகக் கட்டப்பட்டுக் காலந்தவறிக் குழந்தை பிறந்தமையால், குழந்தை சிவந்த கண்களை உடைத்தாயிருந்தது அதைக் கண்ட அன்னையார், என்கோ செங்கண்ணனோ? என்று சொல்லிக்கொண்டே இறந்துவிட்டார்.

குழந்தை வளர்ந்து சோழநாட்டுக்கு அரசனானான் திருவானைக்கா சென்று அங்கு ஒரு சிவன் கோயில் கட்டினார். பின்னர் தில்லைக்குச் சென்று அந்தணர்களுக்கு அழகான மாளிகைகள் அமைத்துக் கொடுத்து அரனடி சேர்ந்தார் என்பதே இவ்வரலாற்றின் சுருக்கமாகும்.

இவ்வரலாற்றில் பேசப்படும் யானைக்குக் காட்டில் காணப்பட்ட சிவலிங்கத்தை வழிபடவேண்டுமென்ற எண்ணம் எப்படி உண்டாயிற்று? காட்டில் வாழும் விலங்குகளுக்குக் கடவுளை வழிபடவேண்டுமென்ற எண்ணம் இயல்பாக உண்டாவதில்லையே! அப்படியிருந்தும், யானைக்கு அந்த எண்ணம் எப்படி உண்டாயிற்று? அதிலும் காட்டில் காணப்பட்ட சிவலிங்க வடிவமே கடவுளைக் குறிக்கும் அடையாளம் என்று யானை எப்படித் தெரிந்துகொண்டது? சிவலிங்கத்தைக்குளிப்பாட்டுவது—மலர் சாத்துவதுதான் கடவுளை வழிபடும் முறை என்று

(13-ம் பக்கம் பார்க்க)

டாலர்—ரூபிள் சண்டை

"ஜனசக்திக்கு"
பாலபாடம்

அரசியல் நிர்ணய சபையிலே இடம் பிடித்துக்கொண்டு, சமஸ்தானாதிபதிகள், தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்வார்கள். புதிய பலம் அவர்களுக்கு ஏற்படும். ஏற்கனவே உள்ள பலத்துடன் இதுவும் சேருவதால், அவர்களுடைய எதேச்சாதிகாரம், வளருவதற்கு வழி ஏற்படுகிறது, என்று நாம், திருவாங்கூர் சம்பவத்தைப்பற்றி விளக்கு கையில் குறிப்பிட்டோம். நாம் குறிப்பிட்டதால், 'ஜனசக்தி'க்கு, அந்த விஷயம், பெரிதாகவோ, முக்கியமானதாகவோ படவில்லை. முன்பு தீட்டியபடியே—ஆனால் காரத்தைக் குறைத்து—மீண்டும் நம்மைக் குறை கூறும் முறையிலே எழுதுகிறது நோய் முற்றுகிறதோ என்று அஞ்சுகிறோம்.

நிற்க, நாம் கூறின இதே கருத்து, இந்த வார பீபிள்ஸ் ஏஜ் இதழிலே வெளிவந்திருக்கிறது—அது, ஆங்கில ஜனசக்தி—பம்பாய் ஏடு.

பாவல்பூர் முதலிய சமஸ்தானங்களிலே, அடக்குமுறை தாண்டவமாடுவதை பீபிள்ஸ் ஏஜ் எடுத்துக் காட்டிவிட்டு, சமஸ்தானாதிபதிகள், அரசியல் நிர்ணய சபையிலே இடம் பிடித்துக் கொண்டதால், தங்களைக் கேட்பார் இல்லை என்ற துணிவுடன் அடக்குமுறையில் மும்முரமாக ஈடுபடுகிறார்கள் என்று கூறுகிறது.

இதையேதான் நாம் கூறினோம்—யூனியனில் சேர்ந்தாக வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம்—சேருவதால் யூனியனுக்கோ, சமஸ்தான மக்களுக்கோ இலாப இல்லை, ராஜாக்களுக்கும் அவர்களின் எதேச்சாதிகாரத்துக்கு தான் இலாபம், என்று கூறினோம். ஐரோப்பிய அரங்கத்துச்சிக்கல்நிறைந்த பிரச்னைகளை எல்லாம் சென்னை டேவிட்சன் தெருவிலே இருந்தபடி தீர்த்துவிடும் சர்வவல்லமை வாய்ந்த ஜனசக்திக்கு, இதனை நாம் கூறினால் புரியும் என்று நம்பினோம், ஏமாந்தோம். பீபிள்ஸ் ஏஜும் இதையே கூறுகிறது. அந்த ஏடு, ஜனசக்திக்குப் பழக்கமான 'ஆசான்.' ஆகவே, முன்பு புரியாதது; இனியாவது புரியும் என்று நம்புகிறோம்.

'நையாண்டி, மிகத் திறமையான கலை. கொஞ்சம் முறை தவறினால், அதுவே ஆபாசக் குப்பையாகிவிடும். ஜனசக்திக்கு, அந்தக் கலை புதிது. அதற்குப் பழக்கமான கலை எல்லாம், அந்த, பட்டந்தரசன் பராக்குக்காரனுக்கு உத்தரவிடும் முறையிலே, பேசுவதுதான்! தொடாதே! கை வைக்காதே! டவுனைத் துரத்து! அடக்குமுறையை நிறுத்து! ஜனசக்தி விற்பனையை அதிகப்படுத்து! —என்ற இம்முறையில் உத்தரவிடும் கலைதான் ஜனசக்திக்குப் பழக்கம். எனவேதான்பாபம், நையாண்டி செய்யும் கலையிலே ஈடுபட்டு, தோற்று இருக்கிறது.

வடநாட்டுக்கு வெள்ளாட்டியாக வேண்டாம் என்று திராவிடர்கழகம் திருவாங்கூருக்குக் கூறுகிறது. வடநாடு என்றால், டாட்டா, பிர்லா, பஜாஜ் மட்டுந்தானா திராவிடர் கழகத்தின் கண்களுக்குத் தெரியவேண்டும். ஏன்? அங்கும் பாட்டாளிகள், விவசாயிகள் உள்ளனரே! என்று ஜனசக்தி, நையாண்டி செய்ய முயற்சித்திருக்கிறது.

நமது கண்கள், அவர்களைக் காணாமலுமில்லை—நாம், அவர்களின் நிலையைக் கண்டு மனம் இளகாமலும் இருந்ததில்லை. அதற்கு கொஞ்சம், திராவிடநாடு பழய ஏடுகளைப் படிக்க வேண்டும். ஓய்வு கிடைக்கும்போது செய்யட்டும்.

ஆனால், நாம்கூறும்போது, கேலிக்குரியதாகத் தோன்றும் விஷயம், மதிப்புக் குரியதாக, அதே ஜனசக்திக்குத்தோன்றுகிறது, வெளிநாட்டு பிரச்னையாக அது இருக்குமானால் இதோ ஓர் எடுத்துக் காட்டு.

வடநாடு—தென்னாடு, என்ற பிரச்னையை நாம், அர்த்தமற்றுப் பேசவுமில்லை, அந்தப் பிரச்னையிலே ஆழ்ந்த உண்மை இல்லாமலும் போகவில்லை. டால்மியா, டாட்டாமீது கோபம் கொண்டு பேசும் குரோதம் மட்டுமல்ல, பெரியதோர் பொருளாதாரப் பிரச்னை நாம் பேசுவது. இனி அது என்ன என்று புரியவைக்கிறோம்.

வடநாடு, தொழில் வளத்திலே, மிக மிக முன்னேறிக்கொண்டு போகிறது, தென்னாடுகளை மிஞ்சும் அளவுக்கு. அதிலும், அமெரிக்கக் கூட்டுறவுடன் வளருகிறது. நம்மைச் சுரண்டுவது பவுன் அல்ல, ரூபாயும் அல்ல, டாலர், நாட்டியமாடுகிறது. முன்பு பொறாமையுடன் பிரிட்டிஷ் முதலாளிகள் எதிர்த்தனர் வடநாட்டு முதலாளிமார்களை, இப்போது அவர்களை, அமெரிக்க முதலாளிகள் புன்னகையுடன் தழுவிக் கொண்டு, கூட்டாளியாக்கிக்கொண்டனர். பெரிய தொழிற்சாலைகள் நிரம்பிய நாடு ஆகிறது வடக்கு.

தென்னாடு (திராவிடம் என்றால் தான் பிடிக்காதே ஜனசக்திக்கு!) இதேபோது, விவசாய நாடு ஆகவே இருக்கிறது.

வடநாடு தொழில் வளம் நிரம்பியும், தென்னாடு விவசாய நாடாக மட்டும் இருக்குமானால், இந்த முறைக்கு பொருளாதாரத் துறையிலே, என்ன பெயர்? சற்றே ஜனசக்தி, தனது படிப்பகத்திலிருந்து, சாதாரண பொருளாதாரப் புத்தகத்தை எடுத்துப் படித்துவிட்டு, பிறகு, இக்கட்டுரையைப் படிக்க வேண்டுகிறோம்.

தொழில் வளம் உள்ள வடநாட்டிலே, செல்வம் வளரும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும், வெளி உலகத் தொடர்பு அதிகமாகும், அதன் பயனாக சாதனங்களும் வசதிகளும் கிடைக்கும், வாழ்க்கை வசதிகள் கிடைக்கும், கல்வி வளரும், சிந்தனை வளரும், கலையும் வளரும்.

விவசாய நாடு ஆக உள்ள தென்னாட்டிலே, வானத்தைப் பார்க்கும் புத்தியும், வயற்றைக்கழுவும் வித்தையும், என்னமோ இருக்கிறேன் என்ற இழப்புப் பேச்சும் இருக்கும், நாளாக நாளாக விவசாயத்தின் மூலம் கிடைக்கும் பலன் குறையும், மக்களின் வாழ்க்கைத்தரம் மட்டமாகும். அவர்கள் காட்டுப் பூச்சிகளாவர், உலகத் தொடர்பு அற்று, வாழ்க்கை வசதி அற்று, வறியராய்ப் போவர்.

இந்திப்பூபர்சம், லங்க்ஷ்யர்,

மான்செஸ்டர், ஷெப்பீல்டுக்கு, அடிமையாக இருந்தகாலத்தைக் கொஞ்சம் ஜனசக்தி கவனப்படுத்திக் கொள்ள வேண்டும். பிரிட்டன் தொழிலரசாகவும், இந்தியா, ஏரடிக்கும் சிறுகோலைக்கொண்ட நாடாகவும் இருந்தபோது, சீமையிலே துரைகள், இங்கே கருப்பர்கள்!! இவ்விதந்தான் நிலைமை இருந்தது.

அதே நிலைதான் வடநாடு தொழிலில் வளர்ந்து தென்னாடு விவசாய நாடு ஆகமட்டுமே இருப்பதான நிலையின் விளைவாகும்.

அதுமட்டுமல்ல, தொழில் வளம் வளர, வளர, அதிக உழைப்பும் குறைந்த அளவு பலனும் தரும் விவசாயத்தை வடநாடு மேலும் மேலும் கைவிட்டு விடும். அதேபோல, தொழில்வளம் அற்ற தென்னாடு மேலும் மேலும் விவசாயத்திலேயே ஈடுபடும்.

வடநாடு, இங்கிருந்து விளைபொருள்களை, மூலப்பொருள்களை வாங்கிச்செல்லும். தென்னாடு, வடநாட்டிடமிருந்து, உற்பத்திப் பொருளை வாங்கிக் கொண்டிருக்கும். இந்த முறைக்குப் பொருளாதாரப் புத்தகத்தில என்ன பெயரிட்டிருக்கிறார்கள் என்பதை, பொருளாதார சாஸ்திரத்தின் உச்சநிலையான பொதுவுடைமையுடன் விளையாடும் ஜனசக்தி படித்துப்பார்க்கட்டும்.

விளைபொருள்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, உற்பத்திப் பொருளை வெளிநாட்டிலிருந்து வரவழைத்துக் கொள்வதன் மூலமாகத்தான், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுகிறது. பாரதியார் பாடினாரே, "கண்களைவிற்றுச் சித்திரம் வாங்கிடும்" போக்குபற்றி, அது இதுதான். இது கூடாது என்று கூறுகிறோம்! நையாண்டிக்குரிய விஷயமா இது?

பழைய நாட்களிலே ஏகாதிபத்யம், அதிகாரம் செய்யும். இந்நாளில, வியாபாரம் செய்யும். இதுவும், மார்க்ஸ் காட்டிய மகத்தான பாடம், சீடர்கள் இதனை மறந்தனர்!

வடநாடு, தொழிலரசு அமைத்துக் கொண்டுவிட்டது. தென்னாடு, அதற்கு மூலப்பொருள் தருகிறநாடு ஆகவும், வடநாடு அனுப்பிவைக்கும் பொருளை வாங்கும் மார்க்கட்டாகவும் அமைகிறது. இது, மிகப் பயங்கரமான பொருளாதார ஏற்றத் தாழ்வையும், அதன்பலனாக சீர்குலைவையும் உண்டாக்கும். இருபத்து, இருபது ஆண்டுகள் இம்முறை நீடிக்குமானால் தென்னாடு பட்டிக்காடு வடநாடு பட்டணம். இதிலே சந்தேகம் வேண்டாம்.

லங்காஷயர் தான் லண்டனை ஆதிக்கத்துக்குக் கொண்டுவந்தது. என்பதை மறப்பது, அரசியலுக்கும் பொருளியலுக்கும் உள்ள தொடர்பு பற்றிய பாலபாடத்தை மறப்பதாகும். பிரபஞ்சத்திலே உள்ள பெரிய பெரிய பிரச்னைகளிலே நுழையும் ஜனசக்திக்கு, அடிப்படைக் கல்வியும் வேண்டும்.

"என்னசார் இது, திருப்பித் திருப்பி, இந்தியவிவகாரமே பேசுகிறீர். எனக்குச் சர்வதேசியப் பிரச்னைபற்றித்தான் ரொம்பஆசை" என்று ஜனசக்திகூறும். சரி! ஐரோப்பாவுக்கும் சற்றுபோய் உலவுவோம்.

அமெரிக்காதயாரித்திருக்கும் மார்ஷல் திட்டம், அதோ ஐரோப்பாவிலே நடமாடுகிறது. அமெரிக்கா அந்தத்திட்டத்தை ஆடவைக்கிறது, பிரிட்டன் பாடுகிறது, பிரான்சு தாளம் போடுகிறது. இந்தத்திட்டத்தின் அடிப்படைஎன்ன?

ஐரோப்பாவை, இருபகுதிகளாகக் கவனித்து, ஒருபகுதியை, தொழிற்சாலைக் கூடமாக்குவது, அமெரிக்க உதவியுடன். அதாவது டாலர்நாடு!! மற்றொருபகுதி ஐரோப்பா, விவசாய நாடாக, அழகிய கிராமங்கள், சிறுகுட்டைகள், அதிலே வெள்ளைநிறவாத்துகள், அதை மேய்த்துக் கொண்டுள்ள சுருண்ட கூந்தலழகுள்ள சிறுமிகள், இப்படிப்பட்ட காட்சிகள் உள்ள இடமாக்குவது.

மார்ஷல் திட்டத்தின்படி, ஆங்கில அமெரிக்கக் கூட்டுக்கம்பெனி முறையிலே, மேற்கு ஐரோப்பியப் பகுதியை, தொழில்வளம் உள்ள பகுதியாக்குவது, கிழக்கு ஐரோப்பியப்பகுதியை விவசாயபபகுதியாக்குவது; கிழக்கே மூலப்பொருள், மேற்கேதொழிற்சாலை, அங்குபண்ணை இங்கு பாக்டரி (Factory) அங்கு உழவன், இங்கு உல்லாசச் சீமான், இம்முறையில் ஏற்பாடு இருக்கவேண்டும் என்பதாகும். மேற்கு ஐரோப்பியப்பகுதிக்குக் கிழக்கு ஐரோப்பியப்பகுதி வெள்ளாட்டியாக வேண்டும் என்பதே மார்ஷல் திட்டம்.

இதனை முன்பு, சர்ச்சில், பட்டாளத்தால் சாதித்துவிடமுடியும் என்றுஎண்ணி ஏமாந்தார். பட்டாளத்தால் சாதிக்கமுடியாததைக்கூட, பணத்தால் சாதிக்கமுடியும் என்கிறார் ட்ரூமன்.

டாலரைக்கொண்டு அங்கு என்ன செய்யவேண்டுமென்று, அமெரிக்கா எண்ணுகிறதோ, அதேதான் இங்கும்; வடநாடு தொழில்வளம் இருக்குமிடம், தென்னாடு அதற்கு வெள்ளாட்டியாவது.

அங்கே, டாலரை, ரூபிள் தடுக்கிறது—ட்ரூமனை, ஸ்டாலின் தடுக்கிறார்,

இங்கே? ஏன் ஜனசக்தி, சிந்திக்கக் கூடாது.

வடநாட்டுக்கும்அமெரிக்காவும்இடையே ஏற்பட்டுவரும் உறவுகள் தெரியாதா? அதன்விளைவு என்ன என்பதை யூகிக்க முடியாதா? அந்த யூகம்இருப்பதால்தான் திராவிடர் கழகம், திராவிடநாடு தனிநாடு ஆகவேண்டும் என்று போராடுகிறது—வடநாட்டுடன் சேரமறுக்கும் பகுதிகளைப் பாராட்டுகிறது. ஜனசக்தி எண்ணுவது போல, அவ்வளவு ஏமாளித்தனயாகத் திராவிடர் கழகம் நடந்துகொள்ளவில்லை. நம்மைப்புரிந்துகொள்ள ஜனசக்திக்கு நேரம் இல்லை—ஒருவேளை முயற்சித்தும் முடியவில்லையோ? டாலர்—ரூபிள், சண்டையே, இன்று முற்றிக்கொண்டு வருகிறது. வடநாடு, டாலர் நாடு ஆகிறது. தென்னாட்டை அதற்கு வெள்ளாட்டியாக்குவது, நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும், மக்களின்வாழ்வைக் கெடுப்பதாகும், பொருளாதார எற்றத் தாழ்வை, சீர்குலைவை உண்டாக்குவதாகும். இத்தகைய காரியத்துக்கு, 'ஜனசக்தி' பயன்படக் கூடாது என்பது நமது எண்ணம்.

★

மணமகள் தேவை

ஐயர் கிரேட்படித்த ஆசிரியராகஇருக்கும் 29-வயதுடைய ஒருவருக்கு மணமகள் தேவை. ஐயர்கிரேட் ஆசிரியையாகவும் அழகுடையவராகவும் இருக்க வேண்டும். எந்தவகுப்பாயினும் சரி. கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும்.
விவரங்களுக்கு:—

மணம் C/o
திராவிடநாடு, காஞ்சீபுரம்.

போர்—வரவு!

இந்தியா, உலகப் போரில் பங்கு கொண்டதல்லவா? அந்தப் போரிலே தோற்ற ஜெர்மனி, ஒவ்வொரு நாட்டுக்கும் நஷ்ட ஈடு தொகை தந்தது. இந்தியாவுக்கு, $1\frac{1}{2}$ கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு ஜெர்மன் தொழிற்சாலைச் சாமான்கள், நஷ்டஈடு தொகைக்காகத்தரப்பட்டிருக்கிறது. இதுபோன்றே ஜப்பானும், இந்தியாவுக்கு நஷ்ட ஈடுதர வேண்டி இருக்கிறது. நிபுணர்கள் இப்போது, அதற்கான புள்ளி விவரத்தைக் கவனித்துக் கொண்டுள்ளனர்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டில் உள்ள தால்மியாபுரத்திலிருக்கிற சிமெண்டு தொழிற்சாலையை அந்த வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உரிமையாக்கட்டும். செய்யத்துணிவு கொள்வாரா இவர்? நன்றி விசுவாசமாவது இவருக்குண்டா?

இவரின் ஆடம்பரவாழ்வு, அந்தத் தொழிலாளர்களின் இரத்தத்தால் ஆக்கப்பட்டதல்லவா? இவர் அனுபவிக்கும் சுகம், அவர்கள் சலியா உழைப்பால் சேர்ந்ததல்லவா? உண்டா அவர்களிடத்தில் இரக்கக் கருணை இவருக்கு? தனக்குச் செல்வத்தைத் திரட்டித் தந்தவர்கள் செக்கு மாடுகளெனச் சூதின்றி உழைக்க, அவர்கள்பால் அன்பு பிறக்காத இவருக்கு, நாற்கால் ஜந்துவின் மீது நல்லெண்ணம் ஏற்பட்டு விட்டதாம். அதற்காக உயிர் விடவும் தீர்மானித்து விட்டாராம்!

பசு பாதுகாப்பு எனப் பேசி, இரு வகுப்பாரிடையும் உள்ள பகையைப் பெரிதாக்கி, குழப்பத்தைத் தோற்றுவித்தவண்ணம் இருந்தால்தான் நாட்டு மக்கள் கவனம் வேறு பக்கம் திரும்பாமல் இருக்கும். இல்லையேல் தால்மியாக்கள் கண்டுபிடிக்கப் படுவார்கள்! தங்கள் உழைப்பை உதிரத்தை உரிஞ்சும் அட்டைகள் தால்மியாக்கள்தான் எனும் உண்மையை உழைப்பாளிகள் உணரும் நிலைவந்துவிடும். இழிந்த வாழ்வை—ஏமாளித்தனத்தை வீசி எறிய விழிப்படைவார்கள். எத்தர்களின் சுகபோகம் சரிந்த மணல் மேடாக்கப்படும். இதனை தெரிந்துள்ள காரணத்தால்தான் தால்மியாக்கள் மக்களின் நினைப்பை நேர்மையற்ற பாதையில் திருப்ப முயல்கிறார்கள். இது போன்ற உதவாத பேச்சை மக்கள் உதாசீனம் செய்யவேண்டும்.

காந்தியாரை இதுபற்றிக் கேட்டுள்ளார்கள். "ஹிந்துக்கள் மாடுகளைக் கொல்லவில்லையானாலும், கேவலமாக வளர்க்கிறார்கள். வேண்டிய அளவு அவைகளின் வளர்ச்சியில் கவலை கொள்வதில்லை. பசு கறவை நின்றதும், அதனை அடிமாட்டிற்கு விற்றுவிடுகிறார்கள். அதிக விலை கொடுப்பவர்களுக்கு விற்க முனைகிறார்கள். காளைகளைக் கொடுமைப்படுத்தித் துன்புறுத்துகிறார்கள். ஹிந்துக்களிடந்தான் பெரும்பாலும் மாடுகள் இருக்கின்றன. மற்ற நாட்டைக் காட்டிலும் இங்குதான் அவைகள் வளமற்று இருக்கின்றன. கவலை காட்டப்படுவதுமில்லை. இங்கிலாந்தின் கால்நடைச் செல்வத்தைக் கவனியுங்கள்.

அங்குள்ளவர்களுக்கு மாட்டிறைச்சி முக்கியமான உணவு. இருந்தாலும் அவைகளின் செழுமையில் அதிக அக்கரை காட்டுகிறார்கள்" என எடுத்துக் காட்டியுள்ளார். ஏற்குமா இந்தஉரை தால்மியாவிற்கு.

தொழிலாளரின் துயர் துடைக்க வீறு கொள்ளுங்கள். ஏழை உழவர்களின் உலர்ந்த தேகத்தைப் பாருங்கள். வேலையற்ற திண்டாட்டத்தால் தேய்ந்துபோய், நடக்க சக்தியற்று, தளர்நடை நடந்து உங்கள் முன் நடமாடும் துன்பத்தைக் காணுங்கள். பசித்தோர் பட்டாளம் ஈனக்குரலில் உங்களைச் சபிப்பதை, உங்கள் செவியினால் கேளுங்கள். கடலுக் கப்பாலிருந்து காற்றோடு கலந்துவரும் அழுகுரல் உங்கள் காதுகளில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றினதுபோல் பாயவில்லையா? உங்கள் மனம் பதறவில்லையா?

இது, அவர் செவி புகாமல்போனாலும் போகிறது; இங்குள்ள சில பசு பாதுகாப்பாளருக்காவது ஏறட்டும். வட நாட்டு வம்பை இங்கு உடுக்கடித்து வரவேற்க வேண்டாம். திராவிடத்தின் தனிப பண்புக்கேற்பப் பயனுள்ள செயல் பலபுரிவோம் தோழர்களே!

உணர்சியற்ற மாக்கட்டைகளா நாம்? நமதுதிராவிடமக்களைப் பிறநாட்டில்பழித்துப்பேசுவது கேட்டும் வாளா இருப்பதா? பிறந்த நாட்டில் பெற்ற துன்பத்திலும் புகுந்த நாட்டில் கிடைப்பது குறைவானதுதான் எனும் எண்ணத்தால் அல்லவா, அங்கு கிடைக்கும் வசவையும் பொருட்படுத்தாமல் அவர்கள் அங்கேயே இருக்கத் துணிகிறார்கள்? 'பொன்னோடு திரும்புங்கள்; புகழுடன் வாழ்வீர்கள்' என உறுதி அளிக்கவேண்டாமா? இன்னும் எவ்வளவு காலத்திற்கு அண்ணன் தம்பிகளை ஆழ்கடல் பிரித்து வைத்திருப்பது? இதற்குப்பரிகாரம் தேடவேண்டாமா? இங்குள்ளநஞ்சையையும் புஞ்சையையும் நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கான முறையில் மாற்றி அமைக்கவேண்டாமோ? ஆங்கிலேயர் அகன்றும் ஆரியர்சுரண்டும் அவனியாகவா நம்திராவிடம்இருக்க வேண்டும்? ஆள் மாறினாலும் அவதி மாறாத நிலையை நாம் அறியவேண்டாமா? அறிந்ததை நிறைவேற்ற நெஞ்சுறுதி கொள்ள வேண்டாமா? தேவையற்ற திருப்பணிக்குச் செலவிடுவதை நிறுத்தி, நமது உழைப்பை திராவிடத்தைக் காண்பதற்குச் செலவிடுவோம்! வாரீர் தோழர்காள்!

✲

நாகை
மணி பகுத்தறிவுக் கழகம்

சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டபோது, பல திக்குகளிலிருந்தும் பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. பிரச்சார மேடை அமைப்பது மிக ஆபத்தான வேலையாக இருந்த காலம் அது. ஊரெங்கும் எதிர்ப்பு; ஒருவகை இருவகை எதிர்ப்பல்ல—ஒருபுறம் சர்க்கார், மற்றோர்புறம் பார்ப்பன அதிகாரிகள், பணக்காரர், வைதீகர் ஆகியோரின் எதிர்ப்பு. இவ்வளவுக்குமிடையே எதிர் நீச்சு, இயக்க காரியம். இதனைப் பெரியார் செய்துவந்தபோது, அவருக்கு இருமருங்கிலும், இரு சிங்கங்களென நின்றவர்கள், மாயவரம் தோழர் நடராஜன் அவர்களும், நாகை மணியுமாவர். இருவரும் இன்று இல்லை. உடற்கட்டு, உள்ள உரம், உழைப்பதில் சலியாத தன்மை கொண்ட அவர்களின் ஒப்பற்ற தொண்டின் விளைவுதான், இன்று தஞ்சை மாவட்டத்திலே இயக்கத்துக்குள்ள செல்வாக்கு. மறைந்த மணியின் நினைவுக் குறியாக, நாகை வெளிப்பாளையத்தில், மணி பகுத்தறிவுக் கழகம், அமைத்து, அவர் ஆற்றிவந்த தொண்டினைத் தொடர்ந்து நடத்தி வருவதே, அவர்பால் நமக்குள்ள மரியாதையைக் காட்டும் முறையாகும் என்ற நோக்குடன், நாகை திராவிடத் தோழர்கள் மேற்படி கழகத்தை நடத்திவருகிறார்கள். 15-7-47 அன்று மாலை, நாகை அவுரித்திடலில் மணி பகுத்தறிவுக் கழக மூன்றாவது ஆண்டு விழா, குடந்தைத் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தோழர்கள் மதியழகன், நெடுஞ்செழியன், சம்பத், அண்ணாதுரை ஆகியோர், காலஞ் சென்ற மணி அவர்களின் மாண்புகளை எடுத்துரைத்துவிட்டு, பகுத்தறிவின் அவசியத்தைக் குறித்தும், திராவிட நாடு தனி நாடு ஆகவேண்டியது பற்றியும் பேசினர்.

திராவிட நாடு

காஞ்சி] 27—7—47 [ஞாயிறு

நாற்றம் அடிக்கிறது!

✻

மதுவிலக்கு வெற்றிபெறவில்லை. கள்ளச் சாராயம், பெருகிவிட்டது. பகிரங்கமாகவே, மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறார்கள். போலீசாரால், நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. திருட்டு மதுவிற்பனை இலாபகரமான தொழிலாகி விட்டது. மதுவிலக்கு வெற்றி பெறாமல் ஏட்டிலே சட்டம் இருப்பதால் சர்க்காருக்கு வீணாக வருமானம் குறைகிறதே தவிர, வகையான பலன் ஏற்படவில்லை.

M. L A. க்கள், தங்கள் வட்டாரத்திலே இந்தப் பிரச்னையைக் கவனிக்க வேண்டும்.

இவை, துக்கமும் வெட்கமும் தரக்கூடிய வாசகங்கள்—அல்ல, அல்ல—குற்றச் சாட்டுகள். எதிர்க் கட்சிக்காரனின் மனமாச்சரியமா! இல்லை! காங்கிரஸ்காரரின், உரை. கொடி தூக்கி மட்டுமா, அல்ல; காங்கிரஸ் கட்சியின் கொறடா தோழர் பாபிநீடு அவர்களின் பேச்சு—போகிற போக்கிலேயோ, பொச்சரிப்பின் காரணமாகவோ சொன்னதுமல்ல, பொறுப்பை உணர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை. எங்கோ அலுவலகத்திலே உட்கார்ந்து கொண்டு அவர் தயாரித்த அறிக்கையுமல்ல, மதுவிலக்குச் சட்டம் அமுலில் உள்ள வட்டாரத்திலே, இதற்காகவே சுற்றுப்பயணம் நடத்தி நிலைமையைக் கண்டறிந்து, உள்ளக் கொதிப்புடன், வெளியிட்டுள்ள அறிக்கை—மாகாண முதலமைச்சரின் பார்வைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள அறிக்கை. மதுவிலக்கு வெற்றிகரமாக நடைபெறவில்லை! காங்கிரஸ் கட்சிக் கொறடாவின் அறிக்கை இவ்விதம்! இதைவிட, வேதனை தரக்கூடிய உண்மை வேறு இருக்கமுடியாது. ஆளவந்தார்களுக்கு, இதைவிட வெட்கக் கேடான விஷயம் வேறு இருக்கமுடியாது. மதுவிலக்கு வெற்றிபெறவில்லை! ஏன்? எதிர்க் கட்சியின் கேள்வி என்று இதனை ஆளவந்தார்கள் அலட்சியப் படுத்தக்கூடாது—மதுவிலக்கு வெற்றிபெற வேண்டும் என்ற ஆவலுள்ளவரின், ஏக்கம் நிறைந்த கேள்வியாகவே இதனைக் கருதவேண்டுகிறோம். ஏன் வெற்றி பெறவில்லை? எதிலே வெற்றிகிடைத்திருக்கிறது, இதிலே கிடைக்க! அதோ, ஓமாந்தூராரின் மேஜைமீது, பாபிநீடு அனுப்பிய அறிக்கைக்குப் பக்கத்திலே, உள்ள வேறு அறிக்கைகள் மட்டும் என்ன, வெற்றி விருதுகளா, அல்ல, தோல்வி அட்டவணை தானே!

தொழிலாளர் பிரச்னை—முழுத் தோல்வி!

ஆசிரியர் பிரச்னை—அவதி நிரம்பிய தோல்வி.

அரிசி நிலைமை—அடி வயிற்றைக் கலக்குமளவு தோல்வி.

எதிலே வெற்றி கண்டார் ஓமாந்தூரார், பள்ளி, ஆசிரியர்களை மிரட்டுவதிலே தவிர!

வெற்றி காணமுடியாது—சட்டம் சரியில்லாததால் அல்ல, போதுமான அதிகாரம் இல்லாததால் அல்ல, மந்திரி சபைக்குத் திறமை இல்லாததால்! இருக்கும் ஓரளவு திறமையையும், "குடும்பத்தைச் சுமுகமாக" நடத்திச் செல்லும் வித்தைக்கே செலவிட வேண்டியிருப்பதால், நாட்டிலே வேறு கட்சிகளே இருக்கலாகாது என்ற ஆதிக்கப் பேராசைக் கொள்கையை நிலை நாட்டுவதற்குச் சக்தியை விரயம் செய்கிற காரணத்தால், ஓமாந்தூராரின் மந்திரி சபையினால், எல்லாக் கட்சிகளாலும் ஒரு மனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட மது விலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியவில்லை.

M. L. Aக்கள், மதுவிலக்குச் சட்டத்தை மனதார வரவேற்றவர்கள், ஏன் அது வெற்றிகரமாக, நடைபெறுவதற்காக அக்கறையுடன் பணிபுரியக்கூடாது? எங்கே செய்தனர்? ஏது, அவர்களுக்கு அதற்கு நேரம்? லீகைத் திட்டிக் கொண்டிருப்போமா, கம்யூனிஸ்டு கட்சியையும் கொள்கையையும் ஒழித்தே தீருவதென்று, பிர்லா மீது ஆணையிட்டுக் கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்வோமா, திராவிடர் கழகத்தைத் தாறுமாறாகப் பேசி, அதன் செல்வாக்கைச் சிதைப்போமா, ஏழை ஆசிரியரை மிரட்டுவோமா, என்ற இன்னபிற 'திருத்தொண்டுகள்' புரியத்தானே அவர்களுக்கு நேரம் இருக்கிறது இதுபோக, மிச்சம் இருக்கும் நேரமோ, நீ எந்தக் கோஷ்டி? சி. ஆரா, காமராஜா? உண்மை ஊழியரா, நிரந்தர ஊழியரா? வெறும் ஊழியரா? என்று கோஷ்டிச் சண்டையையும் அதனால் வரும் பலா பலன்களையும் கவனிக்க வேண்டிய மகத்தான கைங்கரியத்துக்குச் செலவிடவேண்டியிருக்கிறது. மதுவிலக்கு வெற்றி பெற வேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சியும் கவலையும் பிறக்கக்கூடப் பாபம், அவர்களுக்கு நேரம் இல்லை. மேடையிலே மார்தட்ட மட்டுமே மதுவிலக்கு! பாபிநீடு சொல்வதென்ன, அரக்கோணம் வண்டி, கரூர் வண்டி, என்று புதுமொழிகள் ஏற்படும் அளவுக்குச் சந்தி சிரிக்கிறது, சட்டத்தின் முறிவு! வீடுகள், கடைகளாகி, விவசாயிகள், லைசென்ஸ் பெறாத வியாபாரிகளாகி, முக்காடிட்டுக் குடித்தவன், முற்றத்திலே வாந்தி எடுக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

மதுவிலக்குச் சட்டம், எவ்வளவு மகத்தான வரப்பிரசாதம் என்று மக்களிடை பேசப்பட்டது! கள்ளும் சாராயமும் ஒழியட்டும், பாட்டாளி வீடுகளிலே தேனும் பாலும் பெருகும்! என்று ஆருடம் கூறப்பட்டது. ஆருடத்தின் யோக்யதையை இதோ அம்பலப்படுத்துகிறார் பாபிநீடு! வெட்கப்பட வேண்டியவர்கள், காங்கிரசார் மட்டுந்தான் என்று கூறவில்லை—ஆனால், முதலிலே வெட்கப்பட வேண்டியவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள காங்கிரசார்தான். மதுவிலக்கு மகத்தான தர்மோபதேசம் மட்டுமல்ல—நாட்டு மக்களின் மீது, ஒரு புதுச் சுமை—ஏனெனில் மதுவினால் இது வரை கிடைத்துவந்த வருமானத்தை இழந்து, புதுவரிகளைத் தாங்கவும் முன் வந்துள்ளனர் மக்கள்! இந்தப் புதிய பாரத்தைத் தாங்கும் மக்களுக்கு, தங்கள் பணி விழலுக்கிறைத்த நீராவது தெரிந்தால் எவ்வளவு வேதனைப் படுவர். ஒரு கட்சி, தன் பெருமையை முரசு கொட்டுவதற்கு மட்டுமே ஒரு திட்டம் இருக்கிறது என்றால், யார் அந்தக் கட்சியின் போக்கைக் கண்டிக்காமலிருப்பர்? ஏன் இந்த M. L. Aக்கள், கண்ணுங் கருத்துமாக இருந்து மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெறுவதற்கு வேலை செய்யக்கூடாது? [illegible] போயிருக்கவேண்டும் — ஓட்டுவேட்டைக்குப் போகவில்லையா, ஒற்றையடிப் பாதைமட்டுமே உள்ள கிராமங்

களுக்கு? கிராமங்களிலே, கமிட்டி களிடமிருந்து நீக்கவேண்டும். அச்சம், தயை, தாட்சணியம் அற்றவர் குற்றவாளிகள்? யார் அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள்? எப்படி அவர்களால் சட்டத்தை ஏய்க்கமுடிகிறது என்பன வற்றைக் கண்டறிந்திருக்கவேண்டும் —இதற்குக் காங்கிரஸ் கட்சியினரை மட்டுமல்ல, திராவிடர் கழகத்தினரையும் பயன்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். எங்கே நடந்தது அவ்வித மான முயற்சி? எங்ஙனம் நடக்கும், திராவிடர் கழகம் என்ற பேச்சைக் கேட்ட உடனேதான் அவர்களுக்கு, மைனர் வயதிலிருந்து மேஜர் ஆகிற பருவத்திலுள்ளவனைக் கண்டதும், மைனர் சொத்தை நிர்வகித்துவரும் ஏஜண்டுக்கு வருகிற கோபம் வருகிறதே, பாபம்!

இப்போதும் நாம், மெயில் பத்திரிகையைப்போல, முதுவிலக்குத்தான் தோற்றுவிட்டதே! இனியும் ஏன் அதைக்கட்டிக்கொண்டு அழவேண்டும், என்று யோசனை கூறவில்லை.

நல்லதோர் திட்டத்தைச் சட்டமாக்கி, அது வெற்றிகரமாக நடைபெற்று, மக்களுக்கு மிக்க நன்மை தரும் என்று நம்பச்செய்து, பொது மக்களை ஏமாற்றினதாக, மந்திரிசபை மீது குற்றம் சாட்டுகிறோம்.

ஆளும் கூட்டமாகிவிட்ட, காங்கிரஸ் M. L. A.கள், சட்டசபை புகுந்ததுபோதும் பராபரமே என்று இருக்கும் போக்கு, நகைப்புக்கும் கண்டனத்துக்கும் இடமானது என்று கூறுகிறோம்.

பொறுப்புள்ள, புதிய திட்டத்தைப்புகுத்திவிட்டு, அதன் வெற்றிக்காக, கட்சிக் குரோதத்தையும் மீறி, எல்லாக்கட்சியினரின் ஒத்துழைப்பையும் பெற முயற்சி செய்யாதது, மன்னிக்கமுடியாத குற்றம் என்று கூறுகிறோம்.

ஆளவந்தார்களின் அக்கரையற்ற தன்மை, நிர்வாகத்திறமைக்குறைவு, தாங்கள் எவ்வளவு தவறு செய்தாலும் கேட்பார் இல்லை என்ற அசட்டுத்தைரியம், உண்மைக்காக யார் பரிந்துபேச முன்வந்தாலும், ஓஹோ! அவன் பச்சைச் சட்டைக்காரன், இவன் சிகப்புச்சட்டைக் காரன், அதோ அவன் கருப்புச்சட்டைக் காரன் என்று கேலியும் கண்டனமும் பேசி, பிரச்சார பிரங்கியால் அவர்களை நாசம் செய்து விடலாம் என்ற பாசிசப் போர்முறை, இவை களே, மதுவிலக்கு வெற்றி பெறாததற்குக் காரணம். ஆசைகாட்டி மோசம் செய்யும் போக்குஇது. ஓமாந்தூராருக்கு ஒரு வார்த்தை. "கலியுக ஜனகரே! நாத்தீகத்தை ஒழிக்கும் சிரமமான காரியத்திலே ஈடுபடுகிறீராம், மெத்தச்சந்தோஷம். ஆனால், முதலிலே, தயவுசெய்து, இந்த 'நாற்றத்தை' ஒழியும்." நாம் கூறினாலாவது, கோபத்தால், வெட்கத்தை மறைக்கப்பார்க்கலாம்—நாற்றம் அடிக்கிறது என்பதைக் கூறுபவர், தங்கள் நண்பர், கட்சிக்காரர், சொறட பாபிநீர், கவனமிருக்கட்டும்! இந்தக்காரியத்தை முதலிலே கவனித்துவிட்டு, பிறகு வாரும் நாத்தீக ஒழிப்புக்கு. நாற்றம் அடங்கட்டும் முதலில்!

ஐயோ யாழ் முறிந்தது

மயில் வாகனனார் எனும் பெயரால் வளர்ந்து, விபுலாநந்தர் எனும் பெயரால் சிறப்பிக்கப்பட்டு, தென்மொழி, வடமொழி, ஆங்கிலம் முதலியன நன்கு பயின்று, ஒழுக்கத்தால் உயர்ந்து, ஆராய்ச்சியால் சிறந்து, பிறரால் சிதைந்து ஒதுக்கித் தள்ளப்பட்ட முன்னாள் தமிழரின் இசை அறிவை நுணுகி ஆராய்ந்தறிந்து, 'பிற மொழி இசைநூல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, 'தமிழர்க்குத்தனி இசை உண்டு. மிகவும் தொன்மை வாய்ந்தது' எனும் முடிவிற்கு வந்து, 'யாழ் நூல்' ஒன்று இயற்றி, தமிழர்க்கும் தமிழுக்கும் ஒப்பற்ற தொண்டாற்றி வந்த பெரியார் விபுலாநந்தர் 20—7—47ல் கொழும்பில் உயிர் நீத்தார் எனும் செய்தி, தமிழர்க்கு வேதனை தரும் என்பதில் ஐயமில்லை. இராமகிருஷ்ணர் மடத்தின் நோக்கும் போக்கும் இதுவென அறிந்திருப்பவர்களுக்கு, இளமையிலிருந்து அதனுடன் இரண்டறக் கலந்திருந்தும் சுவாமி விபுலாநந்தரின் தமிழர் பண்பாடு மாறாமல், தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய பெருமை ஆச்சரியத்தை உண்டாக்கும். தமிழர்க்கென வாழ்ந்து உயிர் நீத்த அறிஞரின் சேவையைப் பின்பற்ற உறுதி கொள்வோமாக. —

12-ம் பக்கத் தொடர்ச்சி

யும் உங்கள் வேதங்களையும் அனுஷ்டானங்களையும் நான் வெறுக்கின்றவன். ஆகவே யார் சொன்னாலும் பிராமணர்களுக்கு அடிமையாக இருக்க நான் இசையமாட்டேன். இது உறுதி என்று கூறிவிட்டார்.

உடனே பிராமணர்கள், அரசே! தாங்கள் எங்கள் வேதங்களைப் படிக்கவில்லை! அஹிம்சையைப் போதிக்கும் பாஷாண்டி மதங்களைப் படித்து இப்படி நாஸ்திகராகிவிட்டீர்கள்! யாகத்தில் செய்யும் ஹிம்சை ஹிம்சை யாகாது! அது வேதமந்திரம் ஓதிக் கொல்லப்படுகிறபடியால் அக்கொலை புனிதமானது. மேலும் அந்த ஜீவன்கள் மேலான பிறவியை அடைகின்றன. ஆகவே பிராமண நிந்தைக்கு ஆளாகாதீர்கள் என்றனர்.

உடனே அரசன், மக்கள், விலங்கு மரம், செடி முதலிய எல்லா ஜீவராசிகளிடத்தும் ஒரேவிதமான ஆத்மா தான் இருக்கிறது. மக்கள் யாவரும் ஒன்றே! உயர்வுதாழ்வு கிடையாது. யாகத்தில் செய்யும் கொலையும் கொலைதான். ஆகவே நான் உங்கள் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டான். இவ்வாறு வாக்குவாதங்கள் பல நடக்கின்றன. அரசனே முடிவில் வெற்றி பெறுகிறான். பிராமணர்களுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அரசனைக் கோபக்குறியோடு பார்த்து விட்டுத் திரும்பிவிட்டனர்.

கடைசியில் பிராமணர்கள் இதைப் பற்றி ஆலோசித்து இராமேஸ்வரம் சென்று இராமனிடம் முறையிடுவ தெனத் தீர்மானித்தனர். அவர்களில் சிலர் புறப்பட்டு இராமேஸ்வரம் நோக்கி வந்தனர். பல சாதங்கள் நடந்தனர். வழியில் அனுமான் காட்சியளித்தார். ஆனந்தத்தோடு அனுமானை அடி பணிந்து தங்கள் குறைகளையும், தாங்கள் இராமனிடம் செல்லும் நோக்கத்தையும் கூறிநின்றனர். ஹனுமான் பிராமணர்களுடைய துக்கத்தைக் கண்டு வருந்தினவராய், "ஏ பிராமணோத்தமர்களே! இதற்காக ஸ்ரீ இராமபிரானிடம் செல்லவேண்டாம்! நானே அதனைநிறைவேற்றுகின்றேன்" என்று ஆறுதல் கூறித் தனது இடது கை மயிரில் ஒருபிடியும் வலது கை மயிரில் ஒரு பிடியும் பிடுங்கி எடுத்து இரண்டு பொட்டலங்களாகக் கட்டி அவைகளைப் பிராமணர்களிடம் கொடுத்துப் பின்வருமாறு கூறினார். இந்தப் பொட்டலம் இடது கை மயிராகும். இதனை உங்கள் பகைவரசன் அரண்மனை வாயிலில் எறிந்துவிட்டால் அரசன் அரண்மனையுடன் அந்த நகரமே எரிந்து விடும்! ஒருவேளை அரசன் உங்களுக்குச் சரணாகதி அடைந்துவிட்டானேயானால் இந்த வலது கை மயிர் பொட்டலத்தைத் தூவிவிடுங்கள், அக்னிதேவன் சாந்தமடைந்து நகரை எரிக்கமாட்டான் என்று

(11-ம் பக்கம் பார்க்க)

★ அவுங்சான் ★

படித்துவிட்டு வரத்தான் சென்றான் அந்த வாலிபன், ஆனால் அவன் படித்தபாடங்கள், அவனைப்பரீட்சையில் தேறும் அளவோடுவைக்கவில்லை —தியாகத்தீயிலே புகச்செய்தது, புகுந்தான் புன்னகையுடன். ஏன் ஏற்படாது அவ்விதமான மனஎழுச்சி! அவன் படித்தபாடங்கள் அப்படிப் பட்டவை.

சோர்ணமாளிகையிலே வீற்றிருந்தான் நமது மன்னன். சோந்த நாட்டைவிட்டுக் கிளம்பி, ஊரூராகச்சென்று சோப்பும் சீப்பும் கண்ணாடியும் விற்றுப்பிழைக்கவந்த வெள்ளையர், தங்கள் ஆதிக்கத்தை மெள்ள மெள்ள ஏற்படுத்திக் கொண்டதுடன், நமது நாட்டின் மீது பாய்ந்து, மன்னனை வம்புக்கு இழுத்து, போரிடச் செய்து, போரிலே தோற்ற மன்னனை, சிறைப்படுத்தி, நாட்டைவிட்டே அழைத்துச்சென்று, சிறையிலே வதையச் செய்தனர்—சாகும்வரை!

அவன் படித்த பாடத்திலே இது ஒன்று. வாலிப உள்ளத்திலே இந்தப்பாடம், எவ்விதமான ஆவேச உணர்ச்சியைக்கிளப்பி இருக்குமென்பதை நாம் யூகித்துக்கொள்ளலாம்.

ரத்னகிரி கோட்டை, வெகு தொலைவில் இருக்கிறது. இந்திய பூபாகத்தைச்சேர்ந்த அந்தக்கோட்டையிலேதான், நமது மன்னர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார், வியாபாரம் செய்து பிழைக்கவந்த ஆங்கிலேயரால்.

இதுவும் அவன் படித்த பாடமே. அவனுக்கு வெள்ளையர்மீது வெறுப்புணர்ச்சி ஏற்படாதிருக்க முடியுமா—களங்கமற்ற மனம்—கவலையற்ற பருவம் — கட்டுக்கடங்க மறுக்கும் உணர்ச்சி, இவைகளின் இருப்பிடம், அந்த வாலிபன். அவன் மனதிலே, தன் தாய்நாடு அடிமைப்படுத்தப்பட்ட வரலாறு, ஆழப்பதிந்தது. அவன் பேச்சிலும் மூச்சிலும் அனல்கிளம்பிற்று.

"ஆற்றல் மிக்க நமது படைத்தலைவர், வெள்ளையரின் தாக்குதலை மிகுந்த சாமர்த்தியமாகச் சமாளித்தார். அவர்களிடம், நவீனமுறையிலே அமைந்த பல ஆயுதங்கள் இருந்தன — நம்மிடமோ, பரம்பரை பரம்பரையாக நமது உடலிலே ஆண்மை நிரம்ப இருந்தது—தாக்குண்ட நமது படைத்தலைவர்—தாக்கவந்த வெள்ளையர் திகைக்குமளவு தாக்கினார். ஆனால், அந்தோ! எங்கிருந்தோ பறந்துவந்த பாழும் குண்டொன்று அவரைக் கொன்றது; நமது படை சிதறிவிட்டது, இல்லையேல் இந்நாடு, வெள்ளையரிடம் பிடிபட்டிருக்காது.

என்றும், அந்த மாணவன் படித்தான். விடுதலைப்போருக்கு ஏற்ற உலைக்கூடமாயிற்று அவன் மனம். புரட்சியின் பொறிகள் அவன் கண்களிலே இருந்து கிளம்பின போர்க்கோலம் பூண்டான்—மாணவனாக இருக்கும்போதே, ஆம்!—போர்க்கோலத்துடனேயே மாண்டான்—கொல்லப்பட்டான்.

முப்பத்திரண்டு வயது! முடிசூடா மன்னன் நிலைமை! அந்தோ உடலெல்லாம் குண்டுகள் பாய்ந்தன. களத்திலே அவன் நின்றபோது அல்ல, நாட்டு நிர்வாகக்காரியத்துக்காக, தனது கூட்டுத்தோழர்களுடன் கலந்துபேசிக்கொண்டிருந்த நேரத்திலே கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

அவுங்சான்

அவுங்சான், அடிமைத்தனம் சூழ்ந்திருந்த பர்மாவிலே, ஓர் மகத்தான மின்னல்போலத் தோன்றி மறைந்தார்—மறக்க முடியாத, மனவேதனை என்றென்றும் மாறமுடியாத நிலையிலே மாண்டார்.

பள்ளியில் படிக்கும்போதே அவுங்சான், தனது திறமையினால், மாணவர் தலைவரானார். அவர் அக்காலத்திலே நடத்திய வேலைநிறுத்தம், பர்மா சர்க்காரைத் திணற வைத்தது—பர்மியமக்களின் கண்களைத் திறக்கச் செய்தது; இதோ ஒரு வீரன் தோன்றிவிட்டான் — விடுதலைப் படையை நடத்திச் செல்லக்கூடியவன்—பர்மாவின் அடிமைத்தளைகளை உடைத்தெறியக்கூடியவன்—என்று பேசிக்கொண்டனர்.

பர்மா, இந்திய பூபாகம் வெள்ளையர் பிடிக்குள் வந்த நெடுநாட்களுக்குப் பிறகு, பிடிபட்ட நாடு. மூன்று முறை வெள்ளையர் போரிட்டனர் பர்மாவைப் பிடிக்க. பிறகு அங்கு ஏற்பட்ட, கலகமோ போர் தந்ததைவிட அதிகத் தொல்லையைத் தந்தது வெள்ளையருக்கு. சுதந்திரத் தீ அணைந்திருந்ததே தவிர, அடியோடு பட்டுப்போகவில்லை — நீறுபூத்த நெருப்பாக இருந்தது. இதனை மீண்டும் ஜுவாலையாக்குவதற்கு ஒரு வாலிபனின் ஆவேச உரை போதுமானதாக இருந்தது.

சட்டக்கல்லூரியிலே சேர்ந்த அவுங்கசான், நாட்டு விடுதலையிலேயே நாட்டம் கொண்டதால், மேற்கொண்டு படிப்பதற்கு ஏற்ற மனப்பாங்கு கொள்ளமுடியவில்லை. ஏடுகளைப்பிரிக்கும்போதெல்லாம் நாட்டின் நலிவே கண்முன் தோன்றும்போது, எப்படி முடியும், படித்துப் பட்டம்பெற்று, ஏதோ ஓர்வேலையில்அமர்ந்து குடும்ப பாரத்தைத்தாங்கவேண்டுமென்று.

கூண்டுக்கிளியாக இருக்க மறுத்துவிட்டான்—பாய்மரமற்ற கப்பல்போல, அலை அடிக்கும் திக்கெல்லாம் தள்ளப்பட்டாலும், முடிவில், எப்படியாவது துறைமுகம் சென்றுவிடலாம் என்று நம்பும் மாலுமிபோல, பர்மாவின் விடுதலைக்காக ஏதேனும் ஓர் வழி, கிடைக்கும் மார்க்கமெலாம் சென்று பார்த்துத்தீரவேண்டும் என்று தோன்றிவிட்டது அவுங்சானுக்கு.

பர்மா, அழைக்கிறது! பள்ளிக்கூடம், அந்த நிலையிலே அவனை அடக்கிவைக்க முடியுமா! கம்பிகள் விலகின, கிளி பறந்தது! வல்லூறுதாக்கிக்கொண்டே சென்றது.

பர்மியவிடுதலைப் போராட்டம்,மேஜைகளிலே, நடைபெறும்விதமாக அமைந்துவிட்டது. இங்கு நமது உபகண்டத்திலே ஏற்பட்டதுபோல, சர்க்கா முறையிலே அமையவில்லை.

துப்பாக்கி தூக்கிக்கொண்டுவந்து நம்மைத்தாக்கின துரைமார்களை, கிடைக்கும் ஆயுதத்தைக்கொண்டு தாக்கி விரட்ட வேண்டியதே முறை என்று பர்மியர்கருதினர். அந்நாட்டு விடுதலை வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளை, படிக்கும்போதே மயிர்க்கூச்செறியும்விதமாக அமைந்திருப்பதற்குக் காரணம் அதுதான்.

விடுதலைப்போர் தொடுக்க எண்ணிய அவுங்சான் பள்ளிக்கூடத்தைவிட்டு விலகினான் பாசறைப்பயிற்சிபெறச்சென்றான்.

அதுபோது, பர்மாவிலும், மலாய்பகுதிகளிலும், ஆசியாவை ஆளவேண்டும்என்ற பேராசைகொண்ட ஜப்பானியர்கள், ஆங்காங்கு "முகாம்கள்" அமைத்துக்கொண்டு, பல்கட்டும் டாக்டர்—பழக்கீடைக்காரர்—மருந்துவிற்பவர் — ஓட்டல்காரர், என்ற அவ்விதமான உருவங்களிலே உலவி, ஆங்காங்கு உள்நாட்டுக் குழப்பங்களைக்கிளறிக் கொண்டிருந்தனர். அவுங்சானுக்கு ராணுவப்பயிற்சி கிடைத்ததும், அவர்கள் மூலமாகத்தான். ஹயினன் என்ற இடத்திலே, அவர் ராணுவப்பயிற்சி பெற்றார். நாட்டுவிடுதலைக்கு அது தேவை என்ற எண்ணத்துடன்,

உலகப் போர் மூண்டது — அவுங்சானுக்குச்சந்தர்ப்பம் கிடைத்தது. பர்மாவை நோக்கிவந்த ஜப்பானியப் படைக்கு வழி காட்டிக்கொண்டுவந்த முப்பது வாலிபர்களில் அவுங்சானே, முதலிடம் பெற்றிருந்தார்.

தங்கள் முன்னோடும் பிள்ளை என்ற அளவிலேயே, ஜப்பானியர், அவுங்சானை மதிப்பிட்டனர்—தலைகால் தெரியாமல் ஆடின ஜப்பானியர், அவுங்சானைப் பற்றிப் போட்டது "தப்புக் கணக்கு" என்பது பிறகே அவர்களுக்குத் தெரிய வந்தது. அவர்கள், சரியான ஒரு காளை கிடைத்தது நமக்கு; இந்த அவுங்சானைக் காட்டி, பர்மிய மக்களை நாம் ஏய்த்து விடலாம் என்று மனப்பால் குடித்தனர். பிரிட்டிஷ் படைகள் பின் வாங்கின! அவுங்சான் ஆனந்தமடைந்தார்! ஓடுது பார், என்னாட்டை இதுகாறும் ஆட்டிப் படைத்த பிரிட்டிஷ் படை, பர்மாவைப் பாழாக்கி வைத்த படை, என்று எண்ணிக் களித்தார். "தம்பீ!உன்வீர தீரத்தைநாம் மெச்சுகிறோம். இனிநாம் ஒன்று கூடி இந்நாட்டை ஆளுவோம்" என்று கூறிக் கொண்டே, தன்முதுகைத்தட்டிக்கொடுக்கும் ஜப்பானியனைக்கண்டான்அவுங்சான். "பழய சனியன் போயிற்று, இந்தப் புது ஆள்.........?" இந்த எண்ணம் ஏற்பட்டது. அவுங்சானின் மனம, பிரிட்டிஷார் வெளி எறிவிட்டதுடன் எப்படித் திருப்திப்பட முடியும்? ஜப்பானியரின் கொட்டம் வளருவது கண்டு நெஞ்சம் குமுறினான். பர்மா தங்கள் பிடியில் சிக்கிவிட்டது என்ற தீர்மானமான எண்ணத்துடன், ஜப்பானியர்கள் தங்கள் அடக்குமுறையைத் துவக்கினர்; அவுங்சானின் இரத்தம் கொதித்தது.

முன்பு அவுங்சான், வீரவாலிபன்—இப்போதுவீரப்படைக்குத் தலைவன். ஜப்பானியரின் மேற் பார்வையில் பாமா அமைத்த மந்திரி சபையிலே, அவுங்சான், படைத்தலைவன்! போர்ப்பயிற்சி பெற்ற, ஆயுத பலம் பெற்ற பெரும் படை இருந்தது, அவுங்சானின் சுட்டு விரல் காட்டும் திக்கு நோக்கிப்பாயும் மன திடத்துடன். அவுங்சான் புன்னகை புரிந்தான்—புதுத்திட்டம் தயாராகிவிட்டது. பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டான்! ஜப்பானியரை விரட்டினான்! பர்மாவுக்கு நேரிட்ட புதிய ஆபத்து ஒழிந்தது.

வெறும் அவுங்சானாக இருந்தால், பிரிட்டிஷார், அவனுக்கு ஒரு 'சர்' பட்டம் கொடுத்து உட்காரவைத்து விட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் கண்ட காட்சி என்ன? பல்லாயிரக் கணக்கான போர் வீரர்களின் அணிவகுப்புக்குத் தலைமை வகித்து வந்த அவுங்சான்! பல இலட்சம் பர்மியர்கள், அவுங்சானின் வார்த்தையைச் சட்டமாக ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருந்த நிலை.

வெள்ளையருக்குத் தான், வளைந்து கொடுக்கும் வித்தை மிக நன்றாகத் தெரியுமே! எனவே அவர்கள், இங்கே, இந்தியாவிலே, ஷாநவாசையும், ஷெய்காலையும், குற்றக் கூண்டிலே ஏற்றிவைத்து, எந்தக் குற்றம் செய்ததற்காக, விசாரணை நடத்தினார்களோ, அதே வேலையைச் செய்த அவுங்சானை, சர்க்கார் மாளிகையில் வரவேற்றனர்—இப்போது இங்கு இந்துஸ்தான் கவர்னர் ஜெனரலாக உள்ள மவுண்ட் பேட்டன் பிரபுவே, அவுங்சானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்—அவுங்சானின் படையை, பர்மிய தேசியப் படை என்று அங்கீகரித்தார்.

விடுதலை வீரன் அவுங்சான், பர்மாவின் ஒப்பற்ற தலைவரானார் பிறகுஅவருடைய ஒவ்வொரு முயற்சியும், ஆச்சரியகரமான வெற்றியையே தந்தது. அவர் வேலை நிறுத்தம் செய்யச் சொன்னால், பர்மா முழுவதும் கேட்டது. அவருடைய படை திரண்டது; அதுபோலவே யூகமும் நிர்வாகத் திறமையும் வளர்ந்தது. வெள்ளையர், இனித் தமது பிடி நிலைக்க முடியாது என்று தெரிந்து கொண்டு, பர்மிய நாட்டுச் சுதந்திரச் சாசனம் தயாரிக்கும் உரிமையுடன் பர்மிய அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் திட்டத்தைத் தந்தனர். அரசியல் நிர்ணய சபை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அந்தோ, அதற்கு உயிரளித்த அவுங்சானின் உயிரைக் குடிக்கத் துணிந்தனர், பழிக்கஞ்சாப் பாதகர்கள்.

சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட யூசா, அவனுடைய சகாக்கள், சந்தேகிக்கப்படும் பாமா, இவர்களெல்லாம், அவுங்சானை விட, வயதிலே பெரியவர்கள்—அரசியல் சேற்றிலே ஆழமாகக் காலை வைத்தவர்கள்—அவர்களும் சிறை, நாடு கடத்தப்படல், முதலியவற்றுக்கு ஆளானவர்கள்தான். ஆனால்அவர்கள், அவுங்சான் மீசை கருக்காத வாலிபனாக இருந்தபோது தலைவர்களாக இருந்தவர்கள் — அவர்களின் மனதிலே அவுங்சானின் மின்னல் வேக வளர்ச்சி, பொறாமையை மூட்டிவிட்டது.

போரின்போது, கைது செய்யப்பட்டு, பிறகு பிரிட்டிஷாரால் விடுதலை செய்யப்பட்ட யூசா பர்மா திரும்பிய உடனே, பர்மிய விடுதலை ஒன்றே அவருடைய குறிக்கோளாக இருக்குமானால், பழயபடி தமது கட்சியைத் திரட்டி இருக்க வேண்டியதில்லை. அவுங்சானின் செல்வாக்கைத் தொலைக்க, யூசா முயற்சித்தது, வெளிப்படையாகவே தெரியலாயிற்று. அதிலும் பர்மியவிடுதலைக்கானதிட்டத்தைப் பிரிட்டன் தயாரித்தபோது அவுங்சான் அதை ஏற்றுக் கொள்ள, யூசா, பாமா, ஆகியோர், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தனர் — மறுத்தவர்கள், நாட்டு மக்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக்கொள்ள முயற்சித்தனரா என்றால், அதிலே ஈடுபடவில்லை. அரசியல் நிர்ணய சபைத் தேர்தலிலே தலை காட்டவில்லை. ஏன் தலை காட்டப் போகிறார்கள். அவர்களின் திட்டமேதான் வேறு விதமானதாயிற்றே.

வெற்றிக் களிப்புடன் வீர அவுங்சானும், அவருடைய மந்திரி சபையினரும், கலந்து பேசிக்கொண்டிருக்கும் போது, கொலைபாதகர்கள், குண்டு மழை பொழிந்து, பர்மாவின் ஒப்பற்ற வீரனைக் கொன்று விட்டனர். பர்மிய படுகொலைக்குச் சமமான கோர சம்பவம், உலகிலே வேறு எங்குமே நடைபெற்றதில்லை. கொடியோனான ஜாரும் இந்த முறையிலே படுகொலை செய்ததில்லை. வீர அவுங்சானின் சோக முடிவுக்காக, கண்ணீர் சிந்தாதார் இல்லை.

மூன்று மக்கள்—இவர்களை வளர்ப்பதும், துக்கத்தைத் தாங்கிக் கொள்வதும் தான் இனி எனக்கு வாழ்க்கையிலே உள்ள வேலை என்று அவுங்சானின் துணைவியார் கூறினாராம். உலகமே இருண்டுவிட்டது என்னைப் பொறுத்த வரையில் என்று கூறினாராம். ஆமாம்! பர்மாவின் விடுதலைக்குத் தன்னையே அர்ப்பணித்த அவுங்சானுக்குத் துரோகம் செய்த கூட்டத்தை, அவுங்சானின் கட்சியினரும், சட்டமும் ஒழித்தே தீரும்—பர்மிய வரலாற்று ஏடுகளிலே, அவுங்சான், ஒரு சின்னமாக்கப்படுவார்—உலக ஏட்டிலேயும் கூடத்தான்—ஆனால், என்ன செய்தாலும், சிறைக்கஞ்சாமல், படையை நடத்திச் சென்று பர்மிய விடுதலையைச் சில ஆண்டுகளிலே பெற்றுத் தந்த தன் கணவனின், முடிவுபற்றி எண்ணும்போது, அவுங்சானின் துணைவியாரின் கண்கள் குளமாகுமே! துடைக்க முடியாத சோகத்தைத் தாங்கும் உருவமாயினார் அந்த அம்மை.

9-ம் பக்கத் தொடர்ச்சி

கூறி மறைந்துவிட்டார். இதனைக் கேட்ட பிராமணர்கள் ஆனந்தங் கொண்டு வேகமாகச் சென்றனர். குமாரபாலனைக்கண்டனர். "அரசே! தாங்கள் சுகமா?" என்றனர். சுகமாகவே இருக்கின்றேன்! நான் மாத்திரமல்ல, என் நாட்டிலுள்ள சகல மக்களும் மற்ற ஜீவராசிகளும் சுகமே என்றனன்! உடனே பிராமணர்கள் கேலி நகைநகைத்து, இதோ பார்! உன்னுடைய சுகத்தை! என்று கூறி ஹநுமான் தந்த இடது கை மயிர் பொட்டலத்தை அச்சபையிலேயே வீசி எறிந்தனர். எங்கு பார்த்தாலும் தீ கிளம்பி விட்டது! உடனே அரசன் பிராமணர்களின் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். பிராமண வேதாகம முறைப்படி நடந்துகொள்ளுவதாகவும் ஆணையிட்டான். உடனே வலது கை மயிர் பொட்டலத்தை வீசினர். அக்கினி சாந்தமடைந்துவிட்டது. பழையபடியே வருணாசிரம தருமங்களும் வேதாகம நெறிகளும் நாட்டில் சிறப்பாக ஆட்சி செலுத்தின.

அணுகுண்டு! அனுமார் பிராண்டு!

—(o)—

பள்ளிக்கூடங்களிலே, ஆசிரியர்களே, மாணவர்களுக்கு, நாத்திகத்தைப் போதிக்கிறார்களாம், நமது மாகாண சர்க்காரின் நாசி, எங்கெங்கு இத்தகைய நாத்திகம் பரவுகிறது என்பதைக் கண்டறியும் காரியத்திலே வெகு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது! ஆசிரியர்கள் போதிப்பது நாத்திகமா அல்லவா என்பது ஒரு புறம் இருக்கட்டும். பிறகு கவனிப்போம். ஆசிரியர்களிடம் தரப்பட்டுள்ள, மாணவர்களுக்குப் பாடமாக்கப்பட்டுள்ள பாடங்கள் உள்ளனவே, அவை, படிப்போர், கேட்போர், படிக்கச்செய்பவர் எனும் எவருடைய அறிவுக்கேனும், பொருத்தமானது, உலகம் ஏற்றுக் கொள்ளக் கூடியது என்ற விதமாக உள்ளனவா? அமைச்சர்களைக் கேட்கிறோம்—"ஐயன்மீர்! நீங்கள் அமைச்சரானீர், ஆயினும் என்ன, அறிவுக்கு வேலை தரலாம். யோசித்துப் பதில் கூறுங்கள்—எங்கட்கு அல்ல-ஏழை ஆசிரியர்கட்குமல்ல—உங்கள் நெஞ்சுக்கு — உலகப்பொது அறிவுக்குப் பதில் கூறுங்கள்; நம்பமுடியாத, அறிவுக்குப் பொருந்தாத, சன்மார்க்கத்தைத் துளியும் வளர்க்க முடியாத, ஆபாசம் புராணம் என்ற பெயரால், பள்ளிகளிலே, பாடங்களாக்கப்படுவது, அறமாகுமா, அறிவுடைமை தானாகுமா? அமைச்சர்களின் பிரத்யேகத் தயாரிப்பிலே உண்டாக்கப்படும் ஆசிரியர்களே முன்னின்று வகுப்புகளை நடத்தினாலும் கூட, அவ்விதமான பாடங்களைக் கண்டு மாணவர்கள் எள்ளி நகையாடாமல் இருப்பாரா? நம்புவரா?

அணு குண்டு கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலே வாழும் மாணவர்களுக்கு, அனுமானுக்கு வால் வளர்ந்த கதையைப் பாடமாக்கி வைக்கும் செயல் நாத்திகத்தைக் காட்டிலும், கேடு அல்லவா? அறிவை அவமதிக்கும் நெஞ்சழுத்தம் இருப்பதனால் அல்லவா, பென்சிலின் மருந்தின் பெருமையைப் பேசுபவர் உள்ள நாட்களிலே மாணவர்களுக்குச் சஞ்சீவி பர்வதத்தின் பெருமையை எடுத்துச் சொல்ல மனம் துணிந்தது! இதற்குப் பள்ளிக்கூடங்கள் ஏன்? அழகிய கட்டடங்கள் ஏன்? அதற்கருகே விளையாட்டு மைதானம் எதற்கு? ஏடுகள் கொண்ட படிப்பகம் ஏன்? பஜனைக் கூடமே போதுமே! நம்பமுடியாத புராணங்களைத் தான் நாங்கள் மாணவர்களுக்குப் பாடமாக்குவோம், அவைகளிலே ஆபாசம் இருக்கலாம், கவனிக்கக் கூடாது, அறிவுக்கு முரணாகத் தோன்றலாம், ஆனால் வெளியே பேசக் கூடாது, ஆசிரியரை மாணவனே கூடக்கேட்கலாம், இப்படியும் நடை பெற்றிருக்க முடியுமா என்று, ஆசிரியருக்குந் தோன்றக் கூடும் இவை நடைபெற முடியாதன என்று என்றாலும் வெளியே பேசக்கூடாது, பேசினால் நாத்திகம் பேசினதாகக் குற்றம் சாட்டப்பட்டு, தண்டனை தரப்படும் என்று காங்கிரஸ் மந்திரிமார்கள் கருதுகின்றனர் போலும். அவர்கள் அஞ்சும்படியான நாத்திகம், ஆசிரியர்களால் அல்ல, பாடபுத்தகங்களால் பரவுகிறது. எய்தவனிருக்க அம்பைநோகும் முறைப்படி நடக்கிறது அமைச்சர் குழு. நம்ப முடியாத கதைகளை, நாதனின் திருவிளையாடல் என்று பெயரிட்டு, மாணவனைப் படிக்கச் சொன்னால், நற்கருத்தும் வளராது, உண்மை அறிவும் பரவாது, ஒழுக்கம் ஒடுங்கும், அறம் அழிந்துபடும். இதோ ஓர் கதை! புண்ய கதை!! சாமான்யமான ஏடு அல்ல—ஸ்காந்த புராணம். இத்தகைய கதையைப் படிக்கவேண்டுமென்று மாணவர்களை வற்புறுத்தினால், அறிவும் ஆத்திகமும், சாந்தமும், சத்தியமும் வளருமா, என்று யோசிக்க வேண்டுகிறோம் ஓமாந்தூராரை. புரட்டு எவ்வளவு பொதிந்து இருக்கிறது இந்தக் கதையிலே என்பதைக் கவனிக்க வேண்டுகிறோம். இவைகளை அல்லவா, மாணவர்களின் தலையிலே சுமத்துகிறீர்! இது சரியா? எடுத்துக்காட்டும் எங்களை மறந்து, இந்த விஷயமாக யோசிக்கக் கேட்டுக் கொள்கிறோம், போர்க்கோலம் பூண்டு, "பிடித்து இழுத்து வா, நாத்திகம் பேசும் ஆசிரியர்களை" என்று அதிகாரம் பேசும் அமைச்சர்களை, அறைகூவி அழைக்கிறோம், இவ்விதமான கதைகளைத் தானா நமது மாணவர்கள் படிக்கவேண்டும்—எந்த மதியினாலும் மதிக்கமுடியாத மடமை பொதிந்துள்ள இத்தகு கதைகளை பாட புத்தகங்களிலே சேர்ப்பதை நிறுத்தாத மந்திரி சபையை, மதியை வளர்க்க மறுக்கும் கூட்டம் என்று பெற்றோர் சார்பில், மாணவர் சார்பிலே, நாம் கூறுகிறோம், ஆதாரத்துடன் மறுக்க முன்வரட்டும் அமைச்சர் குழு—தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்களை ஏவினால் நாம் கவனிக்கமாட்டோம் — அறிவுலகத்திலே நின்று, அவினாசியாரும் ஓமாந்தூராரும் புரட்டு நிரம்பிய, புராணங்கள் மாணவர்களுக்கு வேண்டும் என்று வாதிட முன்வரட்டும் பார்ப்போம். வருவதற்கு முன், நாம் எடுத்துக்காட்டும் இந்தக் கதையையும் ஒரு முறை பார்க்கட்டும்—இவைகள் தான் புண்ய கதைகளாம்—பாடங்களாம், மாணவர்கட்கு, வெட்கக் கேடு!

(ஸ்காந்த புராணம் 3-வது பாகம் 36, 37, 38-வது அத்தியாயத்திலுள்ள சுருக்கம்.)

கான்யகுப்ஜா என்ற நாட்டு அரசன் அவையில் பிராமணர்கள் பின்வருமாறு முறையிடுகின்றார்கள்.

"அரசே! தங்களுடைய மருமகனும் பிரும்மாவர்த்தநாட்டு அரசனுமாகிய குமாரபாலன் பிராமண வேதத்தை நிந்தனை செய்கின்றான்! வருணாசிரம தருமத்தை அழித்து நான்கு வருணத்தையும் ஒன்றாக்கி வருகின்றான்! ஆகவே அங்குள்ள மக்கள் பிராமணர்களைப் பூஜிப்பதில்லை. சாந்தி, புண்யாவசன முதலிய அனுஷ்டானங்களைச் செய்வதில்லை! பிராமணர்களுக்குரிய கோதானம், பூதானம் முதலிய தானங்களைச் செய்வதில்லை! சிரார்த்தம் செய்வதில்லை! யாகம் செய்வதில்லை. எங்களுக்குரிய மரியாதையே அந்நாட்டில் போய்விட்டது! பிழைப்புக்கு வழியில்லை!" என்று இரந்து அழுதனர்! உடனே அரசன் குமாரபாலனுக்கு ஒரு ஓலை எழுதிக்கொடுக்கின்றான்; இதனை குமாரபால அரசனிடம் கொடுங்கள், உங்கள் குறைகளை விசாரிப்பார் என்றான். உடனே பிராமணர்கள் குமாரபாலனிடம் சென்று ஓலையைக் கொடுத்து அத்துடன் இராமரால் பிராமணர்களுக்குக் கொடுத்திருந்த பட்டயமொன்றையும் காட்டினார்கள்.

இதனையெல்லாம் குமாரபாலன் பொறுமையாகப் படித்துப் பார்த்துவிட்டு, பிராமணர்களே! நான் இராமனுடைய சாஸனத்தை ஏற்றுக்கொள்ளுபவனல்ல! யாகத்தில் கொலை புரி

(9-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

யானைக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள்? கடவுளை வழிபடுவதற்காக மட்டுமே பிறவி எடுத்ததாகச் சொல்லப்படும் மக்களால்கூடக், கடவுளைத் தாமாகவே அறியவும், அவரை வழிபடும் முறைகளைத் தெரிந்துகொள்ளவும் முடிவதில்லையே! பலநாட்கள்—பலர் சொல்லிக் கொடுத்தாலும், கடவுள் இப்படிப்பட்டவர்—அவருடைய வடிவம் இப்படிப்பட்டது—அவரை வழிபடும் முறை இத்தன்மையானது என்று புரிந்துகொள்ள முடிவதில்லையே! ஒன்றைப்பகுத்தறியும் இயல்பைப்பெற்ற மக்களின் நிலையே இப்படி யென்றால், பகுத்தறியும் தன்மையே இல்லாத மாக்கள் இனத்தைச்சார்ந்த ஒருயானை, காட்டில் காணப்பட்ட ஒருகல்லைக்கண்டதும், அதனைச் சிவலிங்கம் என்றும், அதுவே கடவுளைக் குறிக்கும்வடிவம் என்றும், அதற்கு வழிபாடு செய்ய வேண்டுமென்றும், வழிபாட்டுக்குரிய முறைகள் இவையென்றும் தெரிந்து அதன்படி செய்ததென்றும் சொல்லப்படுவதை எப்படி உண்மையென நம்பி ஒப்புக்கொள்ளமுடியும்?

இனி, யானை சிவனுடையதிருவருளால் அவற்றையெல்லாம் தானாகவே உணர முடிந்ததென்றாகூடச் சில சைவ மெய்யன்பர்கள் கூறக்கூடும். மக்களாய்ப் பிறந்தாலன்றிச் சிவனுடைய திருவருளைப் பெற முடியாதென்று சைவ சித்தாந்தங்கள் கூறும் முடிந்த முடிவைக்கூட இச்சிவமெய்யன்பர்களுக்காக ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இவர்கள் கூற்றுப்படி யானைக்குச் சிவனுடைய திருவருள் கிடைத்ததால், அதுசிவனைஉணர்ந்து வழிபட்டதென்பதை ஒப்புக்கொள்வோம்.

பகுத்தறிவுடைய மக்களாலும் கூடப் பலகாலம் முயன்றும் அடையமுடியாததாகச் சொல்லப்படும் திருவருளைக், காட்டில் வாழ்ந்த பகுத்தறிவற்ற—பகுத்தறிவைப் பெறமுடியாத ஒரு யானை யாதொரு முயற்சியுமின்றிப் பெற்றுவிட்டதாகச் சொல்லப்படுமானால், அதே சிவலிங்கத்தின் மீது சருகு விழாதபடி சிலந்தியால் அமைக்கப்பட்ட பந்தரை என் அழித்தது? அந்த மேற்கட்டி சிவலிங்கத்துக்குப் பாதுகாப்பாகச் சிலந்திப் பூச்சியால் அமைக்கப்பட்டதென்பதை உணரும் திருவருளை அந்த யானை ஏன் பெறவில்லை. காட்டில் வாழும் ஒரு யானை, அங்கே காணப்பட்ட ஒரு கல்லைக் கண்டு, அதனைக் கடவுள் என்று எண்ணி, அதற்கு வழிபாடு செலுத்தவேண்டுமென்ற அத்துணைப் பேரருளைப் பெற்றுவிட்டதென்பதை நம்பும்படி நமக்கு உபதேசம் செய்ய முன்வரும் சைவப்புலவர் பெருமக்கள், சிலந்தியால் அமைக்கப்பட்ட மேற்கட்டியும், தன்னைப்போலச் சிவனுடைய திருவருளைப் பெற்ற ஒருசிலந்தியால் சிவலிங்கத்துக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்டதென்பதை ஏன் அந்த அருளைப் பெற்ற யானையால் உணர்ந்துகொள்ள முடியவில்லை? என்று நாம் கேட்டால், நம்மை நாத்திகர் என்று நாக்கூசாது கூறிவிடுகின்றனர். அவர்கள் கூறுவதை நாம், நம்முடைய கண்ணையும், கருத்தையும் மூடிக்கொண்டு நம்பவேண்டுமாம். ஆனால், நாம் கூறுவதை அவர்கள் நம்பவேண்டுமென்று எந்தக்காலத்திலும் நாம் கட்டாயப்படுத்துவதில்லை, அங்ஙனம் கட்டாயப்படுத்துவது தவறு என்ற காரணத்தால். நாம் ஆராய்ந்து காணும் முடிவுகளைப் பொதுமக்கள் கவனத்துக்குவிட்டு, அம்முடிவுகளைச்சிந்தித்துப்பார்த்து அறிவுக்குப் பொருந்துவாதியின் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுமட்டுமேகூறுகின்றோம். மற்றப்படி, "நாங்கள் கூறுவதை நம்புங்கள் இல்லையேல் நரகம்தான்" என்று சபிக்கும் வழக்கம் பகுத்தறிவாளர்பால் எந்தக்காலத்திலுமே உண்டாகாது. எந்த ஒரு உண்மையையும் பொதுமக்களின் தீர்ப்புக்குவிட்டு அவர்களின் முடிவைக் காண்பதே கருத்துக்கும் காலத்துக்கும் ஒத்து நடக்கும் ஒரு பகுத்தறிவாளனின் கடமையும் முறையும் என்பதை இனிமேலாவது அடாவடி அன்பர்களான சைவப்புலவர்கள் உணர வேண்டுகிறேன்.

இனிச், சோழமன்னனுடைய பன்னி கமலவதியார் கருவில் யானையின் துதிக்கையில் அகப்பட்டு இறந்த சிலந்தியின் உயிர்வந்து தங்கிற்று என்று கூறப்படும்செய்தி, உயிர் நூல் முறைப்படி ஒப்புக்கொள்ளமுடியாததாகும். சேக்கிழார் கூறினர் என்பதற்காக, உண்மைக்கும் இயற்கைக்கும் மாறான ஒன்றைக் கருத்துச்செவிடர் அன்றி மற்றையோர் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார். உயிர் நூல் முறைப்படி, குழந்தை பிறப்பதைத் தடைசெய்த காரணத்தால், சோழமன்னன்மனைவி கமலவதியாரும் அந்த அம்மையாருக்குப்பிறந்தகுழந்தையும் அடைந்த கதியைச் சேக்கிழாரே விளக்கியுள்ளார். அதாவது குழந்தை பிறக்க வேண்டிய முறைப்படி பிறக்கவிடாமல், அவன் தாயைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டும், காலந்தாழ்த்துப் பிறக்கும்படி செய்ததால் குழந்தையின் உடலமைப்பில், கோளாறு ஏற்பட்டுக், கண்ணில் குருதி கவிந்து செங்கண்ணனாகப் பிறக்கும்படி நேர்ந்ததென்றும், குழந்தையின் தாய், தான் பெறவேண்டிய குழந்தையை இயற்கை முறைப்படியும் உயிர் நூல் முறைப்படியும் பிறக்கவிடாமல், தன்னைத்தலைகீழாகக் கட்டித் தொங்கவிடும்படி செய்து, குழந்தை வெளி வரவேண்டிய காலந்தவறி வெளிவரச்செய்ததால், அவளுடைய கருப்பையில் ஏற்பட்ட கோளாறு காரணமாகக் குழந்தையைப் பெற்றதும் அவள் இறந்துபட்டாள் என்றும் சேக்கிழாரே கூறியுள்ளார்.

எனவே இயற்கைக்கும் உயிர் நூல் முறைக்கும் மாறான முறையில் நடந்து கொண்ட காரணத்தால், ஒரு பெண் காரணமின்றி இறந்துபடவும், ஒரு குழந்தை தன் அழகை இழந்து அலங்கோல வடிவில் பிறக்கவும் நேரிட்டதே! இது முறையா என்று நாம் கேட்டால், இதற்கும் நமக்கு நாத்திகப்பட்டம் சூட்டுவார்களோ, என்னவோ!

இனிக், காலக்கணிதர் கூறியபடி, குழந்தை பிறக்கவேண்டிய காலத்தில் பிறவாமல் ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் மூன்று லோகத்தையும் ஆளும் என்றதற்கேற்ப, அக்குழந்தை மூன்றுலோகத்தையும் தன் ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்டது என்பதற்குச் சேக்கிழாரால் எந்த விதமான குறிப்பும் சொல்லப்படவில்லை. மூன்று உலகம் என்பது எந்தெந்த உலகம் என்பதற்கும் புராணத்தில் விளக்கம் இல்லை. ஈரேழு பதினான்கு உலகம் என்று சில புராணங்களிலும், திரிலோகம் என்று சில புராணங்களிலும், கூறப்பட்டிருக்கிறதே! இவ்விரண்டில் எது உண்மை என்பதற்கோ, இவ்விரண்டு கூற்றுமே பொய் என்று கூறும் பகுத்தறிவாளனுக்கோ இன்னும் புராண அன்பர்களால் தக்க விடை அளிக்கப்படவும் இல்லை.

இனிக், காலக்கணிதரை அழைத்துக் குழந்தை பிறக்கவேண்டிய

'நல்ல' நேரத்தைக் குறிக்கும்படி செய்த சோழ மன்னன், ஒரு உடற் கணிதரை அதாவது மருத்துவரை அழைத்துக், குழந்தை பிறக்க வேண்டிய காலத்தில் பிறக்கும்படி செய்யாமல் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கும்படி செய்ய வேண்டியிருக்கிற நிலைமையைக் கூறி, அங்ஙனம் செய்வதால் குழந்தைக்கோ, அன்றி அதன் தாயாருக்கோ யாதாயினும் கெடுதல் நிகழுமோ என்றும் கேட்டிருக்க வேண்டுமே! அதனை அந்த மன்னன் செய்யவில்லை. குழந்தை பிறக்க வேண்டிய காலத்தில் பிறந்தே தீரும். அதற்காக ஒரு காலக் கணிதர் பக்கத்தில் இருக்க வேண்டிய கட்டாயமோ தேவையோ இல்லை. ஆனால், ஒரு குழந்தை பிறக்கவேண்டிய நேரத்தில் கட்டாயமும் தேவையுமுள்ள ஒரு மருத்துவனை அரசன் அழைக்கவில்லை. இன்றும் கூட ஒரு குழந்தை பிறக்கும் இடத்தில், அந்த இடம் எப்படிப்பட்ட ஏழ்மையில் தெளியும் இடமாயிருந்தாலும் சரி, அவர்கள் நிலைக்கேற்ப ஒரு மருத்துவனையோ அன்றி ஒரு மருத்துவ மாதையோ பக்கத்தில் இருக்கும்படி செய்வதைப் பார்க்கிறோம். ஆனால், ஒரு நாட்டை ஆளும் 'அறிவு' படைத்த அரசனுக்கு அந்த எண்ணமே உண்டாகவில்லை. உண்டாக நியாயமுமில்லை. காரணம்: மதநூல்கள் எல்லாம் தேவையானதைச் செய்யக்கூடாதென்றும், தேவையற்றதைச் செய்யவேண்டும் என்றுமே தான் கற்பித்துள்ளன. எனவேதான், மன்னனும் தேவையற்ற காலக்கணிதரை அழைக்கவும், தேவையுள்ள—கட்டாயம் பக்கத்தில் இருக்கவேண்டிய மருத்துவரை அழைக்காமல் இருக்கவும் நேரிட்டது. மக்களுக்கிருக்கும் சிறிதளவு அறிவையும் மங்கவைக்க வேண்டுமென்பதையே குறிக்கோளாகக்கொண்டு எழுதப்பட்ட புராணங்களில் அறிவு விளக்கத்திற்கான உண்மைகளை யாங்ஙனம் எதிர்பார்க்க முடியும்?

உண்மைக்கும் அறிவுக்கும் பொருந்த எழுத வேண்டுமென்ற எண்ணமோ விருப்பமோ புராண அன்பர்களுக்கு இருந்திருந்தால், ஒரு நிகழ்ச்சியிலேயே ஒன்பது கோணல் இருக்கும்படி எழுதுவார்களா? எடுத்துக்காட்டாக, இவ்வரலாற்றிலேயே ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறேன். அதாவது, காட்டில் காணப்பட்ட சிவலிங்கத்தை வழிபட்டதாகச் சொல்லப்படும் யானைக்கும் சிலந்திக்கும் சிவன் அருள்பாலித்த முறையைச் சேக்கிழார் கூறியுள்ளார். எப்படியென்றால், யானை செய்த காரியம் சிலந்திக்குப் பிடிக்கவில்லை. சிலந்தி செய்தகாரியமும் யானைக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் யானையும் சிலந்தியும் சிவனை வழிபடுவதில் சரியொத்த அன்புடையனவாகவே இருந்திருக்கின்றன. யானைக்குச், சிவலிங்கத்தைக் குளிப்பாட்டி மலர் சாத்தவேண்டுமென்ற அன்பு இருந்தது. சிலந்திக்குக், குளிப்பாட்டி மலர் சாத்தப்பட்ட சிவலிங்கத்தின் மீது வேறு சருகுகள் விழாமல் பாதுகாக்க வேண்டுமென்ற அன்பு இருந்தது. இன்னும் சமயக் கோட்பாட்டின்படி இந்நிகழ்ச்சியை விரிவாக ஆராயப் புகுந்தால்,

யானையினுடைய அன்பைப் பார்க்கிலும் சிலந்திக்கு சிவனிடத்தில் இருந்த அன்பே பெரிது,—அதிகம் என்றுகூடக் கூறலாம். ஏனென்றால் யானையால் குளிப்பாட்டி மலர் சாத்தப்பட்ட சிவலிங்கத்தின்மீது வேறு சருகுகள் விழாமல் அதனைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்லெண்ணமும் விருப்பமும் இருந்திருக்கிறது. என்றாலும் சிவனுடைய அருள் பாலிக்கும் முறை பாரபட்சத்தோடு கூடியதாகவே இருந்திருக்கிறது. யானைக்கு விடுதலை—சமயக் கோட்பாட்டின்படி பிறவாப் பேரின்பம் கொடுத்து அதனைத் தம்முடன் அந்த விநாடியிலேயே அழைத்துச் சென்றுவிட்டதாகப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இனிச் சிவனிடத்தில் அதிக அன்பு வைத்திருந்த சிலந்தியைச் சோழ மன்னனுக்குப் புதல்வனாகப் பிறக்கும்படி செய்ததோடு நில்லாமல், அவனுடைய உடலமைப்பையும் அலங்கோலமாக அமையும்படி அருள்பாலித்திருக்கிறார்.

ஒரு பகுத்தறிவு வாதிக்கு இவையெல்லாம் வடிகட்டிய பொய்யென்பது கலங்கரை விளக்காய்த் தெரியும் என்றபோதிலும், புராணங்களிலுள்ள செய்திகள் அனைத்தையும் அப்படியே நம்பி அவையெல்லாம் உண்மையானவை என்று உலகுக்கு உரைத்து உளமகிழ்ந்து புளகாங்கிதமடையும் புராண அன்பர்கள் இத்தகைய உளறுபடைகளையும் முரண்பாடுகளையும் இனிமேலாவது உணர்ந்து தெளிவுபெற வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே நடுநிலை திறம்பாத முறையில் இத்தகைய ஆராய்ச்சியை எழுதி வருகின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் இதனை முடித்துக்கொள்கிறேன்.

✻

"கதிரவன்"

(மாதம் இருமுறை)

'கதிரவன்' தோன்றி விட்டான் திராவிடருக்குத் தொண்டாற்ற. வேண்டியமட்டும் கவர்ச்சி கூட்டப்பட்டிருக்கிறது. ஜனாப் ஜின்னா, பெரியார், புரட்சிக் கவிஞர், நகைச்சுவை அரசர், K. R. இராமசாமி, ஜனாப் இஸ்மாயில் முதலிய பெரியார்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளனர். சிறு கதை, மருத்துவர், சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறப்புள்ள சொல் ஓவியங்கள் நிறைந்திருக்கின்றன. சைவர், வைணவர், இஸ்லாமியர், கிரித்தவர் எனும் சமயப் பாகுபாடின்றி, திராவிட இன வளர்ச்சியை ஊக்குவிப்பதே 'கதிரவன்' கொண்டுள்ள பெரு நோக்கு. பல காலம் ஆசிரியர் தொழிலில் நல்லதோர் பயிற்சி பெற்றுள்ள நமது தோழர் பு. செல்வராஜ் அவர்களே 'கதிரவனின்' ஆசிரியர் ஆவர். 'கதிரவன்' தொண்டினைத் தமிழர் உவந்தேற்பர் என்பதில் ஐயமில்லை. உண்மையான எழுத்தாளரின் அரிய முயற்சிக்கு ஆக்கந் தருமாறு தமிழர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆண்டுக் கட்டணம் ரூ. 9—0—0
தனிப்பிரதி அணா 0—5—0

'கதிரவன்' நிலையம்
94, பிராட்வே, மதராஸ்

'இன ஒலி'

'திராவிட நாடு' துவக்கமுதல், அதிலே பணியாற்றி வருபவரான தோழர் G. சீனு அவர்களை ஆசிரியராகக் கொண்டு, 'இன ஒலி' என்ற தமிழ் வார இதழ், திராவிடர் கழகக் கொள்கைகளைத் தாங்கி, காஞ்சிபுரத்திலிருந்து வெளிவர ஏற்பாடாகி இருக்கிறது.

விவரங்கட்கு:—

'இன ஒலி'
காரியாலயம்
20, செட்டி தெரு, :: சின்னக்காஞ்சிபுரம்.
என்ற முகவரிக்கு எழுதவும்.

தேவையற்ற திருப்பணி?

★

"நான்கு நாட்களாகக் காய்ச்சல் குழந்தைக்கு; மனைவிக்கோ பல நாளாக வயிற்றில்வேதனை. வறுமையோ வாட்டிவதைக்கிறது. வேலை கிடைப்பதோ குதிரைக்கொம்பாக இருக்கிறது. வேலை கிடைத்தாலும் வருவாய் போதியதாகஇருப்பதில்லை. கடன் கொடுப்பவர் ஒருவருமில்லை. ஈடுகாட்டிப் பணம்பெற, கையிருப்பில் ஒரு பொருளும் இல்லை. கஷ்டமோ தாங்கமுடியவில்லை. நான் உயிருடன் இருப்பதோ பெருந்தொல்லை. உயிர்விடவோ மனம் இல்லை. காப்பாற்ற வேண்டும் என்ற அக்கரையோ எவர்க்கும் இல்லை."

இப்படிப் பேசுவோர் ஏராளம். பிறர் செவியில் இதுபோன்ற சொற்கள் புகாமல் இருக்கலாம். இருந்தாலும் பலரின் நெஞ்சில் இது போன்ற எண்ணங்கள் குமுறிக் கொண்டுதான் இருக்கின்றன.

நாட்டிலே செல்வமில்லையா? ஏராளமாக இருக்கிறதே. இருந்தும் ஏன் இந்தக் கேவலநிலை நீடிக்கிறது? நிலைபெற்றிருக்கிறது? இது நாட்டுக்குச் சேவைசெய்வோரின் திருப்பார்வையிலே படவில்லையா?

"சாமி! காப்பாற்றுங்கள்! உங்கள் பண்ணையிலே தலைமுறை தலைமுறையாக உழைக்கிறவனுயிற்றே, கொஞ்சம் மனசுவையுங்கள். நோயிலிருந்து பையன் பிழைத்து எழுந்துவிட்டால் உங்கள் பண்ணையிலதானே பாடுபடப்போகிறான். கொஞ்சம் பணம் கடனுகக் கொடுத்து உதவுங்கள். எப்படியாவது உயிரைக் காப்பாற்றுங்கள். ஒரே மகன் எனக்கு இருப்பது. அவனையும் இழந்துவிட்டால், என்னுல் எவ்வளவு காலத்திற்குத்தான் பாடுபடமுடியும்?"

"போடாபோ! பாடுபடுகிறனும் பாடு! எங்காவது பிச்சைஎடு! பணம் வேண்டுமானல் திருடு! பணம் கிணம் என்ற பேச்சை என்காதில் போடவே போடாதே! போடா போ!"

இத்தகைய உரையாடல் நாம் கேள்விப்படாததும் அல்ல. உழைப்பவன், உழைத்து உழைத்து இல்லாமையையே பரிசாகப் பெறுகிறான். நகத்திலே மண்படாமல், நாகரிக உடையுடுத்தி, காலந்தவறாமல் உயர்ந்த உணவருந்தி, உல்லாச வாழ்வு வாழ்ந்து, முன்னவன்உழைப்பால் உயிர் வாழ்ந்துவரும் சீமான், உழைக்காமலே சுகமனைத்தும் பெற முடிகிறது? இதுஎவ்வாறுசாத்தியமாகிறது? இந்த முறையற்ற தன்மை மாறவேண்டாமா? மாற்றப்பட வேண்டாமா? சோம்பேறியின் சுக வாழ்வும், பாட்டாளியின் பஞ்சை நிலையும் ஒழிக்கப்படவேண்டியது உடனடியாகத் தேவைப்படும் வேலையல்லவா? இது அவசியமற்றது? அல்லது அவசரமாகச் செய்யவேண்டியதல்ல என்று எவராவது எடுத்துக்கூற முடியுமா? ஏன் இந்த அநாகரிகமான திட்டத்தைத் தகர்த்தெறிய தேசப்பணி புரிவோர் ஆர்வங் காட்டுவதில்லை? தேசப்பணிக்குஇது புறம்பானது என அவர்கள் கருதிக் கொண்டிருக்கிருர்களா?

"வட்டியிலே கொஞ்சம் கொறைச் சுடுங்கோ. முதல்லே ஒண்ணும் கழிக்கவேணும்!!

"அதெல்லாம் முடியாது. பணம் என்ன செடியிலேயா மொளைக்குது? பாடுபடாமெ பணம் எங்ககிட்ட வந்துடலெ, ஒரு தம்படிகூடத் தள்ள முடியாது. தீத்துவச்சுட்டு உன் நகையே வாங்கிக்கிட்டுபோ!"

"ஒரே பிடிவாதம் பேசாதிங்க! இந்த மூக்குத்தி, என்மவ மாமியார் வீட்டிலே போட்டதுங்க. அவங்களுக்குத் தெரியாமெ, என்மவ பிரசவத்துப்போது அடமானம் வச்சிட்டனுங்க. அதுக்காக, என்மவளே மருமவன்போட்டு சாத்து சாத்துனு சாத்திட்டானுங்க. என்னமோ கொஞ்சம் வட்டியிலெ மாத்திரம் தள்ளிக் கொடுங்க!"

"இந்த எழவெல்லாம் எங்கிட்ட ஏன் சொல்றே? சொன்னது சொன்னதுதான்! கண்டிப்புண்ணு கண்டிப்புதான்! நீ அழுதாஎனக்கென்ன? அலறிஞ எனக்கென்ன? பூரா பணத்தையும் பைசல்செய்திடடு, உன் நகையை வாங்கிட்டுப் போ!"

வறுமையாளருக்கும் வாழ்வாளருக்கும் இருக்கும் உறவு முறை இது. பட்டி தொட்டி முதலிய சகல இடங்களிலும் நிகழும் நெஞ்சு நெகிழும் [illegible] நிகழ்ச்சிகள். இதுவும் நாட்டு நலம் நாடுவோர் தொண்டாற்ற வேண்டிய துறையாகும்.

"எப்படியாவது பையனை படிக்க வைச்சிட்டா போதுங்க! நம்ம கடமையைச் செய்துட்டா அவன் தலையிலே போட்ட எழுத்துப்படி நடந்துட்டுப் போவட்டுங்க. ஆயிரம் இரண்டாயிரம் செலவாகுதின்னு பாத்தா முடியிறதுங்களா? நகை நட்டை வித்துத்தானுங்க பையனை படிக்க வைக்கணுங்க!"

"என் பையனும் நல்லா படிக்கிறவன் தானுங்க! மணியா படிப்பானுங்க! இதுவரைக்கும்ஒருகிளாஸ்லே கூட பெயில் ஆனதில்லிங்க. மேலே படிக்க வைக்கணும் என்று ஆசைதானுங்க. ஆசை மட்டும் இருந்துட்டா போதுங்களா? அதுக்கான பணம் வேணுங்களே? நூறு இருநூறுங்களா? ஆயிரத்துக்குமேலே வேணுங்களே? நான் எங்கிங்க போறது? காலந் தள்ளறதே கஷ்டத்திலே இருக்குது!"

இவ்வாறு பேசிக்கொள்ளாத பெற்றோர்கள் இருக்க முடியாது இந்நாளில். கல்வியின் உயர்வு உணர்ந்தவர்களிடந்தான் இத்தகைய பேச்சு வார்த்தையைக் கேட்க முடியும். ஆனால் வாழ்வதே பெருஞ்சுமையாகக் கொண்டிருக்கும் குடும்பத்தில் இதுபோன்ற பேச்சுக்கே இடம் இருக்கமுடியாது. அங்கு தினசரி நிகழ்வது வேறாக இருக்கும்.

"நாலு நாளாச்சி, எங்க சின்ன பொடுசு வேலைக்குப்போய். அவன் தினம் தினம் பீடி சுருட்டி நாலணு கொண்டாந்து தருவான். அதை வச்சித்தான் காலந்தள்ள வேண்டியதா இருக்குது. அவன் இந்த நாலு நாளா வேலைக்கி போவாததுனுலே, அடுப்பிலே பூனைக்குட்டி தூங்குது."

"எங்க ஏகாம்பரம், அந்த அரிசி மில்லாண்ட மேஸ்திரிக்குச் சித்தாள் வேலை செய்துகிட்டு இருக்கான். எடு என்றதை எடுத்துகிட்டு தூக்குங்கிறதை தூக்கிகிட்டு இருக்கிறதனுலெ, என்னமோ மேஸ்திரி மனுசு வைச்சு தினம் தினம் ஐந்தணு கொடுக்கிறர். அவங்கப்பா என்னை விட்டுட்டு பூட்டதற்கு, இதுவும் இல்லாமெ போனு நான் வீடு வீடா பிச்சை எடுக்க வேண்டியதுதான். என்னமோ கடவுள் புண்ணியத்திலே காலந் தள்ளறம்."

மேல் குறித்தவாறு பேசுகிறவர்களிடம் கல்வியின் முக்கியத்துவமும்,

கல்வியின் மேன்மையையும் எங்கிருந்து எதிர்பார்ப்பது? வயிற்றுப் பாட்டிற்கே அவர்கள் வகை காண முடியுமால், திண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களிடத்தில் கல்வி பெறவேண்டும் என்கிற எண்ணம் தோன்ற வழி ஏற்படுமா? வயிறார உணவு என்பதல்லவா அவர்களுடைய பெரும் பிரச்னையாக இருக்கிறது. இப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டியதல்லவா? இதனை எவர் செய்வது? இதனைப் போக்க வழி வகை செய்வது எவர் கடமை?

"அந்த டாக்டர் ஏன்னமோ ஹரிஜன சேவைதான் செய்கிறார். ஏழை எளியவர்கள் என்று அவர் பேசுவதைக் கேட்டால் கல் மனசும் கரைந்துபோகும். ஒருசமயம், என் மகன் படுத்த படுக்கையாக் கிடந்தான். எங்க சேரிக்கு அடிக்கடிக்கு வருகிறவராச்சேண்ணு, வைத்தியஞ் செய்யணுமுண்ணு கூப்பிட்டேன். பத்துரூபா பணம் கேட்டாரு. நான் ஏழையாச்சே! அம்மாம் பணத்துக்கு நான் எங்கேபோவதெண்ணு' சொன்னேன். பணம் இருந்தா எங்கிட்டவா; இல்லாட்டிபோனா தர்ம ஆஸ்பத்திரிக்குப் போண்ணுசொன்னாரு'

"அப்புறம் என்ன செய்தே?"

"தர்ம ஆஸ்பத்திரிக்கு போனேன். அந்த வள்ளலை கேளு! அங்குமட்டும் என்ன வாழ்ந்துட்டுது? பத்து நாளா படுக்கையிலேகிடந்தும்யாரு சரியா கவனிக்கவேயில்லே. கடைசியிலே பெரியடாக்டர்வந்து, 'பையன் பொழைக்கமாட்டான். எடுத்துகிட்டு போண்ணு' சொல்லிவிட்டாரு. இரண்டு மூன்று நாளைக்கெல்லாம், இந்த ஒண்டிக்கட்டையை விட்டுட்டு போறேண்ணு போய் சேர்ந்துட்டான்?"

"வருத்தப்படாதே! நம்பஏழைங்க சந்ததியே இப்படித்தான் இருக்குது எங்கேபார்த்தாலும். நம்மாலேஎன்ன ஆகும்? அண்ணைக்கி எழுதினவன் அழிச்சா எழுதப்போறான்?"

இத்தகைய வேதனையில் உழல்வோரும் நம்மிடை அமோகமாக உண்டு. இவர்கள் துயர் களைவதும் நாட்டுத் தொண்டுதான். நாட்டுக்குத் தேவையான நல்ல மக்களை வறுமையிலும், பிணியிலும் பரதவிக்க விட்டுவிட்டு, நாட்டுச் சேவையெனச் செப்பித் திரிவது சுயநலச் சேவையே யன்றி வேறொன்றுமல்ல.

"முருகனுக்கு முடி கொடுக்கிற தாய்ச் சின்னபெண்ணு பாயும் படுக்கையுமா இருந்தபொழுது பிரார்த்தனை செய்துகிட்டேன். நேத்திக்கி என்கனவில் வந்து "சீக்கிரஞ் செய்திடு" என்று வேறே முருகன் சொல்லிட்டு போயிருக்கான். செலவு இருபது முப்பது ஆகும். கையிலேயோ ஒரு சல்லியும் கிடையாது. கடன் கொடுப்பவர்களும் இல்லே. காணிக்கை செலுத்தத் தவறினா கடவுளுக்குக் கோபம வந்துடும். அதனாலே நமக்குஏற்படும்தொல்லே."

இவ்வாறெல்லாம் தங்கள் அறியாமையின் காரணமாக, ஆண்டவனைக் கற்பனை செய்து செய்து கடன்பட்டு, கருத்தழிவோர் தொகை கணக்கிலடங்கா. அவர்கள் அறிவு பெற்றாக வேண்டும். தகுந்த கல்வி அவர்களுக்குத் தந்தாக வேண்டும். கற்கவேண்டும் எனும் எண்ணமே அவர்களுக்குத் தோன்றுவதில்லே. தோன்றினாலும், அவர்களுக்குவசதி இருப்பதில்லே.

"ஏண்டா! முத்தா! உன்குடும்பத்தில் எவ்வளவு பேர் இருக்கிறீங்க?"

"ஏன் சாமி கேட்கிறீங்க? கட்டிக் கொடுத்த மவளோட, ஏழு பேர் சாமி!"

"முத்தா! துணிவாங்க கார்டு கொடுத்திருக்காடா உனக்கு?"

"கொடுத்தாங்க சாமி! இதுதானு பாருங்க?"

"இவ்வளவு துணியுமடா, நீ வாங்கப்போறே?"

"அம்முட்டு பணத்துக்கு நான் எங்க சாமி போறது?"

"இந்த எட்டணாவ வச்சிக்கோ, அந்த கார்டை கொண்டாடா!"

"எடுத்து போங்கசாமி! அந்த சனியன் ஏஞ்சாமி எங்கிட்ட!"

இப்படியும் நடக்கிறது! கேட்பாருண்டா இதனை? கிடையாது! முத்தனுடைய பங்குக்குச் சேரவேண்டிய ஆலைத்துணி யாருக்கும் தெரியாமல் கள்ளமார்க்கட்டில் அதிக கிராக்கியுடன் விற்பனையாகிறது. முத்தனுக்குத்துணி வேண்டியதில்லையா? வேண்டியதுதான்! அவனுக்கு புது ஆடை அணிவதிலே வெறுப்பா? இல்லவே இல்லே! பின்ஏன் தனதுபங்கைப் பிறருக்குக் கொடுத்துவிடுகிறான்? தனது உழைப்பால் கிடைககப் பெறும் முழுப்பலனையும் எப்படிப் பிறரிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் கூலியாகக்கொடுக்கும் சிறுதொகையைப் பெறுவதற்குக் கைகட்டி நிற்கிறானோ அதுபோன்றே முத்தன் எட்டணாக் காசுக்கு ஏமாளியாகிறான்.

தனக்கு ஒதுக்கப்பட்ட துணியை வாங்க அவனிடத்தில் பணம் இல்லே. அதற்கான வருவாய் அவனுக்குக் கிடைப்பதில்லே. செல்வர்கள் கட்டிக் கழித்த கந்தல்தான், முத்தன் குடும்பத்தினருக்கு கூறை வேட்டி, பட்டுப் பட்டாடை. அவ்வளவு ஏழ்மை அவனை பீடித்துக் கொண்டிருக்கிறது. என்றுதான் அவன் வாழ்வில் வெளிச்சம் ஏற்படுமோ? அவன் வாழ்வு வளம் பெற உழைப்பது நாட்டிற்குச் செய்யும் நற்பணியாகாது என எவர்தான் கூறத் துணிவர்? அவன் வருவாய் பெருகினாலன்றி, நாட்டின் நிலே உயர்ந்துவிடாது. அதற்கான பணி புரிவதே இன்று அவசியம் தேவைப்படும் ஒன்றாகும்.

ஏழ்மை, பஞ்சம், மடைமை இவ்வளவும் இன்று நாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. இதனைப் போக்க நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்கான மார்க்கம் இல்லையா? அமோகமாக இருக்கிறது. பாலேவனத்திலே வேண்டுமானால் தாக விடாய் தீர்த்துக்கொள்வது முடியாமல் இருக்கலாம். தீஞ்சுவை நீர் நிறைந்த ஊருணிப்பக்கத்தில் நின்று, நாவரட்சியைப் போக்கிக்கொள்ள முடியவில்லேயே என முகாரி பாடுவாருண்டா?

இயற்கை வளமிக்க இந்த நாட்டில் இல்லாமைக்கு இடமிருப்பது வெட்கக்கேடு. பற்பல விதமான பயிர் வகைகளைப் பயிரிட்டுப் பலருக்கும் பசிபோக்கிப் பளபளப்பான வாழ்வு வாழ்வதற்கான வளமிருந்தும், வயிற்றுக்குப் போதவில்லேயே என வெண்பா பாடி வேதாந்தம் பேசித் திரிவது வீண்தானே? 'முடிவிலொரு பிடி சாம்பல்' என முணுமுணுப்பது மன்னிக்கத்தகுந்த குற்றமா? கூறட்டும் கோணல் மதி இல்லாதோர்!

'பிச்சை புகினும் கற்கை நன்றே' எனப் பாசுரம் பாடிக்கொண்டிருந்தால் மட்டுமே அனைவரும் கற்றவர்க

(2ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.